விலை ரூபா 1-50

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 29 ஆவணி 18 ஜுமுஹரம் 8 இதழ் 188

யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 3-9-1987

## தம்பலகாமத்தில் தேவாலயம், வீடுகள் எரிப்பு!

(திருகோணமலை)

தம்பலகாமத்திலுள்ளகிறிஸ்தவ தேவாலயம் ஒன்றும் இரு வீடுகளும் உடைக்கப்பட்டும் எரிக்கப்பட்டுமுள்ளன.

கடந்த திங்கட்கிழமை இச் சம்பவம் இடம்பெற்றது

இக்கிராமத்தில் பாதிக்கப்பட்டு அகதிகளாக வெளியேறி மீண்டும் தங்களது சொந்த இடங்களுக்கு திரும்பிக்கொண்டிருக்கும் தமிழ்மக்களின் எரிக்கப்படாத வீடுகள் இரண்டுக்கே இக்கதி நேர்ந்தது. இச் சம்பவத்தினால் மீண்டும் இங்கு வருவதற்கு தமிழர்கள் அச்சம் கொண்டுள்ளனர். (மா)

## வள்ளம் மூலம் ஆயுதங்கள்: ஈ. பி. ஆர். எல். எவ் ஒப்படைப்பு

(மன்னார்)

ஈ. பி. ஆர். எல். எவ் இயக்கத்தினர் தம்வசமிருந்த ஆயுதங்களை நேற்றுமுன்தினம் மன்னாரில் ஒப்படைத்தனர்

மேற்படி ஆயுதங்கள் ஈ பி ஆர். எல். எவ் இயக்கத்தலைவர் திரு. பத்மநாபாவின் பணிப்பின்பேரில் இராமேஸ்வரத்திலிருந்து ஒன்பது போராளிகளினால வள்ளம் மூலம் கொண்டுவரப்பட்டு மன்னாரில் ஒப்படைக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

ஒப்படைக்கப்பட்ட ஆயுதங்களில் தன்னியக்கத் துப்பாக்கிகள், கைக்குண்டுகள், வெடிமருந்துகள் என்பனஅடங்கும். (எ)

## ● கொட்டடி-நாவாந்துறை மக்களிடையே

# கோஷ்டி மோதல்

# புலிகள் சமரசதீர்வு

## ஆயுதங்களும் ஒப்படைப்பு

(அலுவலக நிருபர் என். கே. துரைசிங்கம்)

கொட்டடி - நாவாந்துறை பகுதி மக்களிடையே மூன்று நாட்களாக இடம்பெற்ற கோஷ்டி மோதல், விடுதலைப் புலிகளால் சமாதானமாக நேற்றுமாலை தீர்த்து வைக்கப்பட்டது. இரு பகுதியினரும் தம் வசமுள்ள ஆயுதங்களை தமிழ்ஈழ விடுதலைப்புலிகளிடம் ஒப்படைத்ததைத் தொடர்ந்து சமாதானம் ஏற்பட்டதுடன், இப்பகுதிகளில் பதற்றம் நீங்கி அமைதி நிலவுகிறது.

யாழ் முஸ்லிம்வட்டார விடுதலைப்புலிகள் காரியாலயத்தில் அரசியல் பிரிவு பொறுப்பாளர் திரு இ திலீபன் தலைமையில் கொட்டடி நாவாந்துறைப் பகுதி பிரதிகநிதிகள் சந்தித்து சமாதானம் மேற்கொண்டனர்.

இச்சந்திப்பில் கலந்துகொண்ட இரு பகுதிப் பிரதி

(5ம் பக்கம் பார்க்க)

## திறந்த பல்கலைக்கழக உபவேந்தர் யாழ் விஜயம்

(யாழ்ப்பாணம்)

திறந்த பலகலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் டி எஸ். விஜயசேகரா உயரதிகாரிகள் சகிதம்நாளை சனிக்கிழமையாழ்ப்பாணம் விஜயம் செய்யவுள்ளார். திறந்த பல்கலைக்கழகத்தின் வடபிராந்தியக்கிளைக்கும் விஜயம் செய்யும் பேராசிரியர் விஜயசேகரா, இக்கிளை மாணவர்களைச் சந்தித்துக்கலந்துரையாடவுள்ளார்.

இக்கலந்துரையாடலின் போது, யாழ். திறந்த பல்கலைக்கழக மாணவர்கள் இதுவரை காலமும் எதிர்நோக்கிய பிரச்சினைகள், கம்பியூட்டர் கல்விக்கு ஆய்வுகூட வசதி இன்மை, நூலக வசதிஇன்மை ஆகியன சம்பந்தமாக மாணவர்கள் எடுத்துக் கூறவுள்ளனர்.

## உபஜனாதிபதி இன்று பதவியேற்பு

(புதுடில்லி)

இந்தியாவின் உபஜனாதிபதியாக டாக்டர் சங்கர் தயாள் சர்மா இன்று புதுடில்லியில் பதவிப்பிரமாணம்மேற்கொள்வார்-

டாக்டர் சர்மா மகாராஷ்டிரா மாநிலத்தின் ஆளுநராக கடந்த பதினேழு மாதங்கள் பதவி வகித்து வந்தமை குறிப்பிடத்தக்கது. (எ)

## இசைப்பா அரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். பலகலைக்கழக தமிழ் மன்றத்தின் ஆதரவில் தேசிய கலை. இலக்கியப் பேரவையின் இசைப்பா அரங்கும், ஒலிப் பதிவுநாடா வெளியீடும் இன்று மாலை நடைபெறவுள்ளது.

கைலாசபதி அரங்கில் நடைபெறும் இவ்வைபவத்தில் 'புது வரலாறும் நாமே படைப்போம்' என்னும் தலைப்பில் இசைப்பா அரங்கு நிகழும்.

## யாழ். வீரசிங்கம் மண்டபம் புனரமைப்பு வேலைகளுக்கு அமைச்சர் 'தஹா' நிதிஉதவி

(அலுவலக நிருபர்)

யாழ். வீரசிங்கம் மண்டபத்தைப் புனரமைப்புச் செய்வதற்கு ஒரு கோடி ரூபா தேவை என்று மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது

இந்தத் தொகையை கூட்டுறவுத்துறை அமைச்சர் கலாநிதி டபிள்யூ. தஹநாயக்கா ஒதுக்கித் தர உறுதி அளித்துள்ளதாக யாழ கூட்டுறவுத் திணைக்கள உயரதிகாரி ஒருவர் 'ஈழநாடு'க்குத் தெரிவித்தார்.

வடபகுதி கூட்டுறவாளர்களினால் அமைக்கப்பட்ட இம் மண்டபத்தில் அரச திணைக்களங்கள் பல இயங்கிவந்தன.

மிக விரைவில் புனரமைக்கப் படவிருக்கும் இம் மண்டபத்தில் முழுமையாக கூட்டுறவுத் திணைக்களத்தில் பல்வேறு பிரிவுகளும் கூட்டுறவுப்பயிற்சிக் கல்லூரியும் இயங்கவிருப்பதாக அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (வா)

## 'சிங்கள குடியேற்றம் திருமலையில் அதிகரிப்பு"

(திருமலையிலிருந்து நமது நிருபர் ஏ. வி. மாணிக்கம்)

சிங்களக் குடியேற்றம் திருமலையில் அதிகரித்துக் கொண்டே போகிறது பிரஜைகள்குழுவுக்கு, இதுகுறித்து நடவடிக்கை எடுக்க எந்தவித அதிகாரமுமில்லை

யாழ்ப்பாணத்திலிருந்து வந்த பத்திரிகையாளர்களுக்கு திருமலை மாவட்ட பிரஜைகள் குழு செயலாளர் திருமதி சுபாஜினி வரதன் விசேஷ பேட்டியளிக்கையில் இவ்வாறு தெரிவித்தார். திருமலையில் அவரின்இல்லத்தில் இப்பேட்டி நேற்று முன்தினம் இடம்பெற்றது.

அவர் மேலும் தெரிவிக்கையில் கடந்தவாரம் அதுவும் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்கும்நேரத்தில் எனது வீட்டைநோக்கி துப்பாக்கிப் பிரயோகம் சரமாரியாக தீர்க்கப்பட்டதுடன், கைக்குண்டும் வீசப்பட்டது வாகனங்களில் வந்த ஆயுதப் படையினரே இச்செயலை செய்திருக்கிறார்கள்.

போராளிகள் ஆயுதங்களை ஒப்படைக்கு முன்னர் சிங்கள குடும்பங்கள் பயத்தினால் வெளியேறி இருந்தனர் போராளிகள் ஆயுதங்களை ஒப்படைத்த பின்னர் முன்னர் இங்கு வந்து அத்துமீறி குடியேறியிருந்த சிங்களவர்களும் வந்துள்ளார்கள் மேலும் சிங்களக் குடியேற்றங்கள் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

இங்கு ஊர்காவல் படையினரின் ஆயுதங்கள் எந்த அதிகாரியின் முன்னிலையிலும் ஒப்படைக்கவில்லை திருமலையில் உள்ள ஊர்காவல் படையினரின் 70 சத வீதமானோர் இங்குள்ளவர்களாக இருக்கவில்லை.

## கொழும்பு - யாழ். இரவு ரயில்சேவை நாளை ஆரம்பம்

(கொழும்பு)

கொழும்பு - யாழ்ப்பாணம் இரவு புகையிரத தபால்சேவை நாளை வெள்ளிக்கிழமை முதல் ஆரம்பமாகும்.

கொழும்பு கோட்டையிலிருந்து நாளை இரவு 7-15மணிக்குப் புறப்படும் புகையிரதம், மறுநாட்காலை 6-30 மணிக்கு யாழ்ப்பாணத்தை வந்தடையும்.

சனிக்கிழமை மாலை 6-35 மணிக்கு யாழ். நகரிலிருந்து புறப்படும் புகையிரதம், ஞாயிறு காலை 5-15 மணிக்கு கொழும்பு கோட்டையை வந்தடையும். [எ]

## காங்கேசன்துறைக்கு 20ம் திகதி முதல் சேவை

(யாழ்ப்பாணம்)

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம்வரை நீடிக்கப்பட்டுள்ள 'யாழ் தேவி' புகையிரத சேவை இம்மாதம் இருபதாம் திகதி முதல் காங்கேசன்துறை வரை நீடிக்கப்படும் என்று புகையிரத திணைக்கள அதிகாரி ஒருவர் 'ஈழநாடு'க்குத் தெரிவித்தார்.

காங்கேசன்துறைவரை புகையிரதப்பாதை அமைக்கும் வேலைகள் தற்போது துரிதமாக நடைபெற்று வருகிறது இதற்கான புதிய சிலிப்பர்கட்டைகள் யாழ் புகையிரத நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளன. (வா)

## ரயில் கட்டணம் குறைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்-கொழும்பு ரயில் கட்டணம நேற்று முதல் குறைக்கப்பட்டுள்ளது.

புதிய கட்டண விபரம் வருமாறு: யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக் கோட்டைக்கு 3ம் வகுப்புக் கட்டணம் 51ரூபா 50சதம், 2ம் வகுப்பு கட்டணம் 146 ரூபா 60சதம்.

யாழ்ப்பாணத்திலிருந்து அநுராதபுரம் 3ம் வகுப்பு 24 ரூபா 90சதம், 2ம் வகுப்பு 70ரூபா 70 சதம்.

யாழ்ப்பாணத்திலிருந்து வவனியா 3ம் வகுப்பு 21 ரூபா 30 சதம், 2ம் வகுப்பு 52 ரூபா 60

(8ம் பக்கம் பார்க்க)

## புதுடில்லிப் பேச்சுக்கள்: புலிகளுடனும் ஆராயப்பட்டது

[புதுடில்லி]

வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கான உபதேச நிர்வாக சபைக்கு அதிகாரங்கள் வழங்குவது குறித்து இந்திய-இலங்கை அதிகாரிகளுக்கிடையே நேற்று புதுடில்லியில் இரண்டாவது சுற்றுப் பேச்சுக்கள் திருப்தியளிக்கும் வகையில் சுமார் நான்கு மணி நேரம் இடம்பெற்றது

பேச்சுக்களில் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் ஜே என். டிக்ஸிற் தலைமையில் இந்திய அதிகாரிகள் குழுவும், ஜனாதிபதி ஜெயவர்த்தனவின் செயலாளர் திரு. மெனிக்திவெல தலைமையில் அறுவர் அடங்கிய இலங்கைக் குழுவும் கலந்து கொண்டன.

இலங்கைக்குழு இந்திய வெளி விவகார இணை அமைச்சர் திரு. கே. நட்வர்சிங்கையும் சந்தித்து பேச்சு நடத்தியது

இந்திய சட்டவல்லுநர்கள் புதுடில்லி வந்துள்ள தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க முக்கியஸ்தர்களுடன் பேச்சுக்களை மேற்கொண்டனர்.

இதேவேளை தமிழர் விடு

(8ம் பக்கம் பார்க்க)

## பாரிஸில் வான் விபத்து: யாழ்வாசி இருவர் பலி!

பாரிஸ், செப். 2

பாரிஸிலிருந்து ஆயிரம் கிலோ மீற்றர்தொலைவிலுள்ள லூட்ஸ் எனுமிடத்தில் நடந்த வான் விபத்தொன்றில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இருவர் ஸ்தலத்திலேயே பலியானார்கள். எட்டுப்பேர் காயமடைந்தனர்.

(8-ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

கடல் தொழிலாளர்களுக்குரிய யமகா வெளி இணைப்பு மோட்டர் புத்தம் புதியது. 8 கோர்ஸ் விற்பனைக்குண்டு நேரடி தொடர்பு கொள்ளவும். T. K. P, நாகரத்தினம், வெடியரசன் வீதி, காரைநகர் ஆலடி அருகாமையில். (சி- 0814)

C. C E. [O/L] மாணவர்களுக்கான கடந்தகால விஞூ-விடைப்பயிற்சிகள், 8 வருட பயிற்சிகள் எல்லாப் பாடங்களிலும் விலைரூபா 25/- பூபாலசிங்கம் புத்தகசாலை, ஸ்ரீ லங்கா புத்தகசாலை, ஸ்ரீ சுப்பிரமணியம் புத்தகசாலை, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் பெற்றுக் கொள்ளலாம். மொத்தமாகப் பெறுவோருக்கு 15% கழிவு தரப்படும். அஸ்ரன் பதிப்பகம், 1 /1, ஆஸ்பத்திரி வீதி, (A. S சங்கரப்பிள்ளை கட்டிடம், 1-ம் மாடி) யாழ்ப்பாணம். (சி- 0356)

சண்டிலிப்பாய்தெற்குகமலா பேக்கரிக்கு அருகாமையில் உள்ள மில்லேனில் 6 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: பொன்னையா- சிறிபாலசிங்கம், மாசியப்பிட்டி- சண்டிலிப்பாய். (சி- 0799)

நல்வ இன வளர்ப்பு மீன்கள், கண்ணுடித் தொட்டிகள், மீன் தொட்டி அலங்காரப் பொருள்கள், மீன் உணவுகள் நியாயமான விலையில். வியாபாரிகளுக்கு விசேட கழிவு உண்டு. Northern angel Aguarium, இராஜ வீதி, அச்சுவேலி. (சி-0801)

Bairaha farms பேட்டுக் குஞ்சுகள், சேவற்குஞ்சுகள். புறெயிலர்குஞ்சுகள் 4ந் திகதி வெள்ளிக்கிழமையும் Hy- Line. Golden comet வெள்ளை, பிறவுண் பேட்டுக் குஞ்சுகள் 9ந் திகதி புதன்கிழமையும் குறைந்த விலையில் விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்க. சற்குணராஜா & பிறதர்ஸ், பிரம்படி கொக்குவில். (சி-0772)

வண்ணார்பண்ணையில்இருபுதிய வீடுகள் அமைதியான சுற்றுடல் எல்லாவற்றிற்கும் வசதியான இடம் தொடர்பு கொள்ளவும் விளம்பர இல: சி-0792 மே/பா, ஈழநாடு, யாழ்ப்பாணம். சி-0792

## சேவை

இந்தியாவிலிருந்து வெளிவரும் தலைசிறந்த பத்திரிகைகளான குமுதம், ஆனந்தவிகடன், யூனியர்விகடன், கல்கி ராணி, ஜெமினிசினிமா, இதயம் பேசுகிறது, சாவி, துக்ளக், மங்கை, சுமங்கலி, கற்கண்டு, அம்புலிமாமா, மங்கையர் மலர், ஞானபூமி, மாலைமதி, Sportstar, FrontLine, கலைமகள், கோகுலம், குங்குமம் ஏனைய நாவல்கள் சஞ்சிகைகளுக்கான ஓடர்கள் மீண்டும் எங்களால் பதிவுசெய்யப்படுகின்றன. ஏனைய விபரங்கட்கு நேரில் தொடர்புகொள்க: மக்மிலன் புத்தகசாலை, No 3, பஸ்நிலையம், ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம். [சி 0812]

## வாடகைக்கு

இந்தியா, சிங்கப்பூரில் இருந்து தருவிக்கப்பட்ட மணமகளின் தலைச்சோடனைகள் வாடகைக்குப் பெற்றுக் கொள்ள கனகசபை தர்மகுலசிங்கம், கருங்காலி, காரைநகர். 190/2, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். சி-0723

## விற்பனைக்கு

ஆரம்பவிஞ்ஞானம் மதிப்பீட்டுபயிற்சிகள் ஆண்டு 4, 5, 6 New Class Work Book for English language Year 4, 5, 6, 7,8 வெளியீடு: ஞானசுரபி புத்தகக் கம்பனி, யாழ்ப்பாணம் சி-0796

கயிறு திரிக்கும் இயந்திரம் விற்பனைக்குண்டு. விபரம்: N வரதராசா, பாடசாலை ஒழுங்கை, ஆனைக்கோட்டை. (சி- 0826)

1987 டிசம்பர் நடைபெறும் G. C. E. O/L தமிழ்மொழி பரீட்சை விசேடசித்திக்கான பயிற்சி நூல்: பகுதி I & II விடைக்குறிப்புகளுடன் வெளியீடு ஞானசுரபி புத்தக்கம்பனி, யாழ்ப்பாணம். சி-0797

திருமண அழைப்பிதழ்கள், திருமண, பிறந்தநாள் வாழ்த்துமடல்களையும் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள "அரஸ் ஜவுளியகம்", 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம், தொலைபேசி: 24001. [சி-0129)

மானிப்பாய் தெற்கில் 2பரப்புக் காணி கிணற்றுப் பங்குடனும் 3 அறைக்குரிய வீட்டு அத்திபாரத்துடனும் விற்பனைக்குண்டு. விரும்பினுல் அதனுடன் இணைந்த மற்ற 2பரப்புக் காணியும் வாங்க ஒழுங்கு செய்து தரப்படும். கு.இ பாலசுப்பிரமணியம், மானிப்பாய் தெற்கு. (சி 0777)

## தேவை

யாழ் மாநகரசபை எல்லைக்குள் சகல வசதிகளுடன் கூடிய கடை ஒன்று வாடகைக்குத் தேவை. சகல விபரங்களுடன் விண்ணப்பிக்கவும்: விளம்பர இல 0805, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். [சி-0805]

மின்சார உபகரணங்கள் விற்பனை செய்வதில் அனுபவமுள்ளவர் ஒருவர் தேவை மானிப்பாய்/ சுன்னுகம் பகுதியில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது. வசந்தி எலெக்ரிக்கல்ஸ், 110, கே. கே. எஸ். வீதி, (பழைய பொலிஸ் ஸ்ரேசன் முன்பாக) சுன்னுகம். (சி- 0789)

எலெக்றிக் வெல்டிங் வேலை தெரிந்தவர்கள் தேவை. உடன் நேரில் வரவும் Balan Iron works, 409, K, K. S. Road, வண்ணார்பண்ணை- (சி- 0816)

மேல்நாட்டு ஆங்கில மருந்து விற்பனைநிலையத்திற்கு அனுபவமுள்ள ஆண் முகாமையாளரும் அத்துடன் இரண்டு விற்பனைப் பிரதிநிதிகளும் தேவை. தொடர்பு: இல. 101, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். சி-0784

மின்தறியில் அனுபவமுள்ள (இயக்குநர்கள்) பெண்கள் தேவைப்படுகிறுர்கள். தகுதி உள்ளவர்கள் நேரில் வரவும் கணேசன் ரெக்ஸ்ரைல் மில்ஸ், தாவடி வடக்கு கொக்குவில். (சி 0735)

புதிதாக ஆரம்பிக்கப்படவிருக்கும் மெல்லிசைக் குழுவுக்கு Organ, Drumb நன்கு வாசிக்கக்கூடியவர்கள் தேவை. இசைக்கருவி சொந்தமாய் வைத்திருப்பவர் விரும்பத்தக்கது. இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம். வயது, விலாசத்துடன் விண்ணப்பிக்கவும். விள. இல. சி-0778 மே/பா., ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம். [சி-0778]

## கல்வி

பாலராசிரியர் பயிற்சி புதிய வகுப்பு விரைவில் ஆரம்பமாகின்றது. க. பொ. த சா/ த) குறைந்த தகமையாகும். சனி, ஞாயிறு தினங்களில் வகுப்பு நடைபெறும். நேரில் சமுகமளித்துக் கற்க முடியாதோர் தபால் வழியும் பயிலலாம்: பாலர் ஆசிரியர் சங்கம், 42, பிரப்பங்குளம் ஒழுங்கை, யாழ்ப்பாணம் (சி-0820)

## சேவை

பாலை, முதிரை, தேக்கு முதலியவற்றிலான நிலை, யன்னல் கதவுகள் எம்மிடமுண்டு அத்துடன் கட்டிடவேலைகள் யாவும் எம்மால் செய்து கொடுக்கப்படும் ஸ்ரார் பில்டர்ஸ் ,40, சப்பல் வீதி, யாழ்ப்பாணம். [சி- 0783]

காலை முதல் மாலைவரை தங்களுடைய சகல பத்திரங்களையும உடனுக்குடன் போட்டோஸ்ரற் செய்துகொள்ள நாடுங்கள். மக்மிலன் புத்தகசாலை, No-3 பஸ் நிலையம், ஆஸ்பத்துரி வீதி, யாழ்ப்பாணம். சி-0752

## 1-ம் வருட நினைவஞ்சலி



செல்வன்
ஜே. கிங்ஸ்லி
ராஜ்குமார்
(டயஸ்)

மலர்வு: 27-10-1970

உதிர்வு: 03-09-1986

எமதருமை மகனே! ஆசைச் செல்வமே! ஓராண்டு ஆனாலும் உன் பேச்சையும், செயலையும் நினைத்துக் கொண்டே இருக்கிறோம் தலைமகனாக பிறந்தவன் நீ சீரும், சிறப்புடன் வளர்ந்தவன் நற்குணம், விவேகம், யாவுமிருந்தன. துணிவும், அஞ்சாமையும் உனது அணிகலன்கள். அக்கிரமங்களுக்கும், கொடுமைகளுக்கும் நீ எதிரி உனது பிரிவுத்துயர் எமது உள்ளங்களில் மாறாத்துயரமாக, ஆறாக ஊற்றெடுத்துப்பாய்கிறது. உன்னை மகனாகவும், சகோதரனாகவும், பேரனாகவும், மருமகனாகவும் மைத்துனனாகவும், நல்ல நண்பனாகவும் பெறுவதற்கு பாக்கியம் கிடைத்தது. கொஞ்சக்காலம் வாழ்ந்து உன் திறமைகளை, பெருமைகளை அநுபவிக்கக் கொடுத்து வைக்கவில்லை என்ன நினைந்து என் செய்தானோ? உன் ஆசை நிறை வேறியதையிட்டு உன் ஆத்மா சாந்தியடையட்டும். உலகு உள்ளளவும் உன் புகழ் நிலைக்கட்டும். உனதன்பான;

பெற்றோர், சகோதரங்கள், அப்பிச்சம்மா, அம்மம்மா, சித்தப்பா, சித்திமார்கள், பெரியப்பா பெரியம்மார்கள், மாமா மாமிமார்கள், மச்சான் மச்சாள்மார்கள், மற்றும் உனது தோழர்கள்.

லில்லி இல்லம்'
முனைத்தொ,
மட்டக்களப்பு. (சி 0695]

## தேவை

யாழ். நகரில் பிரதான வீதிகளுக்கு அண்மையில் ஒருவீட்டின் ஒருபகுதி, ஒரு அறை விருந்தை அலுவலகத்துக்கு உடன் தேவை. விண்ணப்பிக்கவும்: விளம்பர இல. சி 0776 மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். (சி 0776)

1. வயறிங்வேலை தெரிந்தவர் 2. மோட்டார் வைண்டிங் வேலை தெரிந்தவர்கள் தேவை நேரில் வரவும். ஓமேகா, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். சி-0790

## 41-வது நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



திருமதி பொன்மணி
சந்திரசேகரம்

(சந்திரசேகரம் - முன்னை நாள் தொழில் நுட்ப அதிகாரி நெல் சந்தைப் படுத்தும் சபை)

மலர்வு: 02-06-1949
[மல்லாகம்]

உதிர்வு: 29-07-1987
(ஸ்ரீலங்கா தனியார் வைத்தியசாலை, வெள்ளவத்தை)

அன்பின் இலக்கணமாய் பண்பின் சிகரமாய், பாசத்தின் உறைவிடமாய் வாழ்வாங்கு வாழ்ந்திட்டாய் நீ. எம் இதய தீபம் பொன்மணியே! உன் ஆத்ம சாந்திக்குப் பிராத்திக்கும் தகுதி யாருக்குமேயில்லை. இறைவனடி சேர்ந்திட்டாய், இறக்கவில்லை. ஆனுல் எம்மால் உன்பொய் உடம்பின் தொடர்பினை மறக்க முடியவில்லையே!!

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் எதிர்வரும் 7-9-87 திங்களன்று நடைபெற உள்ளது.

உற்றார், உறவினர் நண்பர்களுட்பட ஈமக்கிரியைகளில் கலந்து கொண்டோர், பின் வருகைதந்தோர், வருகைதராமலே அன்னாரின் இழப்பினுல் துயருற்றோர், மற்றும் சகலவித ஏற்பாடுகளுக்கும் உதவியோரனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன், 7-9-87-ல் கீரிமலையில் நடைபெறவுள்ள அந்தியேட்டிக்கிரியை, பின் எமதில்லத்தில் நடைபெறும் கிரியைகள், மதியபோசனம் அனைத்திலும், இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகைதந்து கலந்து கொள்ளுமாறு, மறைந்த அன்னாரின்பால் அன்புரிமைதழுவி அனைவரையும் அன்புடன்அழைக்கின்றோம்.

இ. சந்திரசேகரம்
குடும்பம்.

'மலர் வாசம்'
ஏழாலை மேற்கு,
சுன்னுகம். (சி 0674)

## வகுப்புக்கள்

20-09-87 நடைபெறவிருக்கும் யாழ் சர்வகலாசாலை கொம்பியூட்டர் பயிற்சி நுழைவுப் பயிற்சிக்கான உளச்சார்புப் பரீட்சைவகுப்புக்கள் 31-08-87 காலை 9-00 மணி தொடக்கம் தினமும் நடைபெறும். Science Centre, Karaveddy. சி-0677

108, Brown Rd., Jaffna. A/L 89 இரசாயனம்- ஆசிரியர்: சத்தீஸ். காலை வகுப்பு ஆரம்பம்: 4-9-87 (வெள்ளி) 6-30 a. m. நேர அட்டவணை முதல் வகுப்பில் தரப்படும். மாலை வகுப்பு ஆரம்பம்: 5- 9- 87 (சனி) 5 p.m. (சனி, ஞாயிறு 5 p. m.) [சி- 0759]

## யாழ். மாநகராட்சி மன்றம் கூறுவிலை

யாழ். நவீன சந்தையிலுள்ள 2ம், 10 இலக்கச் சுருக்குக் கேற்றுகளை நேரில் பார்வையிட்டு அவற்றைத் திருத்துவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கூறுவிலைகள் சுருக்குக் கேற்றுகளைத் திருத்துவோரிடமிருந்து எம்மால் 10- 9- 1987ந் திகதி நண்பகல் வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

சீ. வீ. கே.சிவஞானம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

31- 8-1987 [எ- 2157]

## அந்தியேட்டி அழைப்பு

திரு.க. ஆழ்வாப்பிள்ளை

அல்வையம்பதி வாசர், யாழ். நவீன சந்தையில் அமைந்துள்ள 'சந்திராஸ்' உரிமையாளர் திரு. க. ஆழ்வாபபிள்ளை அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் [3-9-87] இன்று வியாழக்கிழமை காலை 10-00 மணியளவில் நடைபெறும். அன்னாரின் ஆத்மசாந்திக்காக உற்றார், உறவினர், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரையும் இவ் வைபவத்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டிக் கொள்கின்றோம்.

இப்படிக்கு
அன்னாரின் குடும்பத்தினர்

சந்திர பவனம்,
அல்வாய் தெற்கு,
அல்வாய். [சி-0828]

## 'வெள்ளிவிழா' நாயகனுக்கு பெரும்வரவேற்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பேராலயப் பங்குத் தந்தையும், யாழ் மறைவட்டார முதல்வருமாகிய அருட் திரு ச. கில்லறி ஜெபநேசன்அடிகளாரின் குருத்துவவாழ்வின் 'வெள்ளிவிழா'' நேற்றுமுன்தினம் மாலை யாழ். பேராலய முன்றலில் அட்திரு எஸ் ஏ. மைக்கல்சாமி தலைமையில் நடைபெற்றது.

ஜெபநேசன் அடிகளாரை பொதுமக்களும், குருமாரும் ஊர்வலமாக அழைத்துச் சென்று, கூட்டுத்திருப்பலிப் பூசை ஒப்புக்கொடுக்கப்பட்டது.

கூட்டுத்திருப்பலிப் பூசையின் பின்னர், மைக்கல்சாமி அடிகளார் தலைமையில் நடைபெற்ற வரவேற்பு வைபவத்தில் கலந்துகொண்ட அனைவரையும், யாழ். மறைமாவட்ட பொதுநிலையினர் தலைவர் டாக்டர் ஜே. பி. ஸி. பிலிப் வரவேற்றுப் பேசினுர்.

இரவு கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றது. (வி)

# "இந்திரா காங்கிரஸ் பல கூறுகளாக பிளவுபடும்நாள் தொலைவில் இல்லை"

## ராஜீவின் ஆசனத்தில் அமரும் எண்ணமும் தமக்கு இல்லை என்றும் கூறுகிறார் கர்நாடக முதல்வர்

(புதுடில்லி)

**"இந்தியப் பிரதமர் பதவியை ஏற்பதை விட இந்திரா காங்கிரஸுக்கு எதிராகப் பலமான கட்சி ஒன்றை அமைத்து திரு. ராஜீவ் காந்தியை பதவி விலகச் செய்வதே எனது இலட்சியம் இதற்கமைய இந்திரா காங்கிரஸ் கட்சியும் பல கூறுகளாக பிளவுபடும் நாள் வெகுதூரத்திலில்லை. மக்களையும் நாட்டையும் காப்பாற்ற இவ்வாறானபிளவு அவசியமே" என கர்நாடக முதலமைச்சர் திரு. ராமகிருஷ்ண ஹெக்டே பி. பி.சி. க்கு அளித்தவிஷேட பேட்டி ஒன்றில் தெரிவித்துள்ளார்.**

அண்மைக்காலத்தில் இந்தியாவில் பிரதமர் ராஜீவ் காந்திக்கு எதிராக பலமான ஊழல் குற்றச்சாட்டுகளும் நிர்வாகச் சீர்கேடு முறைப்பாடுகளும் அதிகரித்து வருகின்றது இதனை அம்பலப்படுத்தும் நோக்கில் முன்னாள் பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. வி. பி. சிங் நாடுதழுவிய ரீதியில் பெரும் ஆர்ப்பாட்டங்களை நடாத்தி வருகிறார். இவரை ஆதரித்து இவருடன் ராஜீவ் எதிர்ப்பு அலையில் புதிதாக பிரவேசித்துள்ளார் ஜனதாக்கட்சி தலைவர்களில் ஒருவரும் கர்நாடக முதலமைச்சருமானதிரு ஹெக்டே.

திரு. வி. பி. சிங்கை தேசிய எதிர்ப்புக் கூட்டணிக்குள் வருமாறு அழைக்க முன்வந்துள்ள திரு ஹெக்டே பி பி ஸியின் ஆசிய வட்டார செய்தி ஆய்வுரை திணைக்களத்தின் தலைவர் திரு. நிநியூஜென்றுக்களித்த பேட்டியிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் பின்வருமாறு கூறுகிறார்.

கேள்வி: நீங்கள் புதிய கட்சி எதனையும் ஏற்படுத்தப் போகிறீர்களா? அல்லது இந்திரா காங்கிரஸுக்குள் பிளவை ஏற்படுத்த விரும்புகிறீர்களா?

ஹெக்டே: இந்திரா காங்கிரஸ் இரண்டு துண்டுகளாக உடைந்து போவது நிச்சயம். சிறிய பிளவா, பெரிய பிளவா என இப்போது கூறமுடியாது.

கேள்வி: திரு. வி. பி சிங்குடன் புதிய கட்சி ஒன்றில் இணைந்து செயற்படுவீர்களா?

ஹெக்டே: புதிய கட்சி அமைக்கும்திட்டம் இப்போது இல்லை. பொதுவான திட்டம் பொதுவான கொள்கையுடைய எதிர்க்கட்சிகளை ஓரணியில் திரளவைப்பதே இப்போதைய முக்கிய வேலை. முதலில் புதிய கொள்கைத் திட்டமொன்று உருவாக்கப்படும். அதை யார்யார் ஆதரிக்கிறார்களோ அவர்கள் ஒன்று சேர்வார்கள் அது இந்நாட்டில் மிக முக்கியமான நிகழ்ச்சியாக இருக்கும்

கேள்வி: இந்திரா காங்கிரஸுக்கு எதிரான அறைகூவல்களில் உங்கள் கட்சியின் நிலையென்ன?

ஹெக்டே: நாட்டையும் மக்களாட்சி மரபையும் காப்பதே இன்றைய முக்கிய தேவை. இதனை ஆதரிப்பவர்கள் அனைவரும் அணிதிரள வேண்டும்.

கேள்வி: ஒரு காலத்தில் நீங்கள் காங்கிரஸ் கட்சியிலிருந்தீர்கள், இப்போது அதனை பழையபடி அமைத்துப் புனரமைப்பது தான் உங்கள் திட்டமா?

ஹெக்டே: இரண்டு மூன்று எதிர்கட்சிகள் இணைந்து அதே நேரத்தில் காங்கிரஸ் கட்சி பிளவுபட்டு அதில் ஒரு பிரிவு எதிர்க்கட்சிகளுடன் இணைந்தால் அவ்வாறு உருவாகும் அணி பெரியஅரசியல் சக்தியாக விளங்கும். காங்கிரஸ் கட்சி முன்போல இருக்காது.

கேள்வி: எதிர்க்கட்சிகள்ஒற்றுமை எந்தளவுக்கு உண்டு?

### ஜனதா — லோக்தள் இணையும் சாத்தியம்

ஹெக்டே: பல எதிர்க்கட்சிகளிடையே பேச்சுக்கள் நடைபெற்று வருகிறது ஹரியானா தேர்தலில் வெற்றி பெற்ற லோக்தளும், ஜனதா கட்சியும் இணையும் வாய்ப்புகளுண்டு மூன்று மாநிலங்களை ஆளும் கம்யூனிஸ்ட் கட்சி, ஆந்திராவை ஆளும் தெலுங்கு தேசம், அஸாமை ஆளும் அஸாம்கணபரிஷத் போன்றவற்றுடன் கூட்டணி அமைக்கப்படும்.

கேள்வி: இந்தியாவின் பிரதமர் பதவியை ஏற்கும் இலட்சியம் உங்களுக்குண்டா? அது நடக்குமென்று நினைக்கிறீர்களா?

ஹெக்டே: இது போன்ற மாயத் தோற்றம் எதுவும் எனக்கில்லை அவ்வாறு நான் மனக்கோட்டை கட்டவும் இல்லை. பிரதமர் நாற்காலியில் அமருவது எனது இலட்சியமுமில்லை. ஆனால் இந்திரா காங்கிரஸுக்கு எதிராக பலமான மாற்றுக்கட்சி ஒன்றை உருவாக்குவது எனது இலட்சியம். (சி)

---

# நக்ஸலைட் வங்கிக்கொள்ளையர் ஐவர் அடித்துக் கொலை!

## திருச்சி கிராமம் ஒன்றில் சம்பவம்

[சென்னை]

திருச்சி மாவட்டத்தில் கிராமம் ஒன்றில் உள்ள மத்திய வங்கியில் கொள்ளையடித்த நக்ஸலைட்டுகளில் ஐவர் பொது மக்களால் அடித்துக் கொல்லப்பட்டனர். கொள்ளையரின் தாக்குதலில்வங்கிக் காசாளர் பலியானதுடன் மற்றும் 7பேர் படுகாயமடைந்தனர்.

நேற்று முன்தினம் நண்பகல் 12 மணியளவில் ஆயுதம் தாங்கிய 8 நக்ஸலைட்டுகள் திருச்சி ஜெயம்கொண்டானுக்கு அருகே உள்ள பொன்பரப்பி கிராம வங்கியினுள் நுழைந்து காசாளர் திரு. நந்தகுமாரிடம் சாவியைத் தருமாறு கேட்டு மிரட்டினர். எனினும் அவர் இதனை மறுக்கவே அவ்விடத்திலேயே சுட்டுக் கொல்லப்பட்டார்.

அங்கிருந்த ஏனைய ஊழியர்களைப் பணயம் வைத்த நக்ஸலைட்டுகள் 5 லட்சம் ரூபா பணத்தைக்கொள்ளையடித்துக் கொண்டு வெளியேறினர். இதற்குள் செய்திகேட்ட பொன்பரப்பி கிராம மக்கள் அவ்விடம் விரைந்து நக்ஸலைட்டுகளின் துப்பாக்கிகளையும் பொருட்படுத்தாது அவர்களை எதிர்த்து போராடினர்.

இம்மோதலின்போது நக்ஸலைட்டுகளில் மூவர் தப்பித்துக் கொண்டனர். ஏனைய ஐவரும் பொது மக்களின் தடியடி கல்வீச்சு தாக்குதலுக்கிலக்காகி மூவர் ஸ்தலத்திலேயே மரணமாயினர் இருவர் ஆஸ்பத்திரியில் மரணமடைந்தனர் (சி)

---

## தாய்க்கு 'மரணதண்டனை' மகனுக்கு 'ஆயுள்தண்டனை'

(கோலாலம்பூர்)

மலேஷியாவுக்குள் போதைப் பொருள்களை கடத்திய 44 வயதான நியூஸிலாந்துப் பெண்மணி ஒருவருக்கு மலேஷிய உயர்நீதிமன்றம் மரணதண்டனை விதித்துள்ளது. இதே குற்றத்திற்காக அவரது 21 வயதுமகனுக்கு ஆயுள்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது

1985ல் இப் பெண்மணி 150 கிராம் போதைப் பொருளை மலேஷியாவுக்குள் கடத்தியபோது பிடிபட்டார். இதேதினம் மலேஷியாவின் வேறொருபகுதியில் இவரது மகன் போதைப் பொருளுடன் கைதானார். இதனையடுத்தே இருவருக்கும் இத்தண்டனைகள் வழங்கப்பட்டன. [சி]

## மியான்டாட் பங்குபற்றுவாரா?

[கராச்சி]

பாகிஸ்தான்கிரிக்கெட் கட்டுப்பாட்டுசபை முன்தான் வைக்கும் சில நிபந்தனைகளுக்கு உடன்பட்டால் மாத்திரமே உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டியில் கலந்து கொள்ளமுடியுமென்றுபாகிஸ்தான்கிரிக்கெட் அணியின் உதவிகப்டன் ஜாவிட் மியான்டாட் தெரிவித்துள்ளார்.

(5ம் பக்கம் பார்க்க)


## வடமாநில மக்களுக்கு ஓர் நற்செய்தி,

தனி அலுமினிய உருக்கிலான, கவர்ச்சியளிக்கக் கூடிய அலுமினிய சட்டங்கள் பெருமளவில் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

ஜப்பானிய ஸ்ரைல் ஷோகேஸ்கள் அலுமினிய ஜன்னல்கள். கதவுகள், அலுவலக பாட்டிஷன்கள், ஷோரூம் அமைப்புகள், வர்த்தக நிலைய அலுமாரிகள் அனைத்தும் வந்து சேர்ந்துள்ளன.

மற்றும் உள் அலங்காரப் பொருள்கள், அத்தனையும் உங்கள் வாடிக்கையாளர்களை கொள்ளைகொள்ளும் அலங்காரங்களில் எந்த அளவானாலும் எம்மிடம்தொடர்புகொள்ளுங்கள்.

## அலெக்ஸ் எலுடெக்கோர்

74, காலி வீதி,
கொழும்பு – 4.

தொலைபேசி: 'ஷோரூம்': 588975
அலுவலகம்: 562370

[எ 2156]


## தென்னாபிரிக்காவில் தங்கச்சுரங்கத்தில் விபத்து: 8பேர்பலி, 42 பேர் புதையுண்டனர்!

கேப்ரவுண், செப் 3

தென்னாபிரிக்காவின் ஒரேஞ்ச் பிறீ, மாநிலத்தில் உள்ள தங்கச் சுரங்கமொன்றில் ஏற்பட்ட விபத்தில் 8 சுரங்கத் தொழிலாளர்கள கொல்லப்பட்டனர். 42 தொழிலாளகள் இவ்விபத்தினால் ஏற்பட்ட இடிபாடுகளுக்குள் சிக்கிப் புதையுண்டனர். 5 பேர் மட்டும் காப்பாற்றறப்படனர்.

'லிப்ட்' ஒன்றில் சுரங்கத் தொழிலாளர்கள் வந்து கொண்டிருந்த சமயம் அந்த 'லிப்ட்' விபத்துக்குள்ளாகி சுரங்கத்தினுள் விழுந்து நொருங்கியதையடுத்து சுமார் 900 மீட்டர் நிலத்தடியில் இருந்த சுரங்கத் தொழிலாளர் பாதிக்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.


## பதவி வெற்றிடம்

யாழ். நகரில் உள்ள ஸ்தாபனத்திற்கு கீழ்க்காணும் பதவிகளுக்கு வெற்றிடம் இருப்பதால் அனுபவ, நற்சான்றுப் பத்திரங்களுடன் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

காசாளர் / எழுதுவினைஞர்
விற்பனையாளா / பழகுநர்கள்

விபரங்களுக்கு:

விளம்பர இல. எ 2150, மே/பா. ஈழநாடு யாழ்ப்பாணம். [எ 2150]



## துர்க்காதேவி அம்மன் ஆலயத்தில் மில்க்வைற் சகாய விற்பனை

4-9-87 தெல்லிப்பளை துர்க்கா தேவியம்மன் ஆலய தேர்த்திருவிழாவின்போது, மில்க்வைற் காட்சிச்சாலையில் ரூ. 15/-க்கு மில்க்வைற் தயாரிப்புகளை வாங்கும் அன்பர்களுக்கு தேவாரம், அறிவு நூல்கள் வீட்டுத் தோட்ட விதைகள் பொலித்தீன் பாக் உடன் மேலதிகமாக காயத்திரி மந்திரத்துடன் கூடிய அழகிய காயத்திரி ஸ்ரிக்கர் ஒன்றும் பரிசாக வழங்கப்படும். மில்க்வைற் மேலுறைகளைச் சேகரித்து வைத்திருப்போர் அங்குகொடுத்து அவற்றிற்கான பரிசில்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

[எ 2155]

மில்க்வைற்
யாழ்ப்பாணம்

### மணி வாக்கு

நம்பிக்கை என்பது ஒருபறவை. காலை இருள் பிரியு முன்பே அது ஒளியை உணர்ந்து பாடி மகிழும்.

— தாகூர்.

## நமது நோக்கு

# அகதிகள் விடயத்தில் அவசரம் வேண்டாம்

அகதிமுகாம்களில் தங்கியுள்ள மக்களில் பலர் மீண்டும் தமதுபழையஇடங்களுக்கு செல்வதில் இன்னமும் அக்கறையில்லாமல் இருக்கிறார்கள் என்றால் அதற்கான சூழ்நிலைகள் இன்னமும் உருவாக்கப்படவில்லை யென்பதே அர்த்தமாகும்.

எனவே அகதிமுகாம்களிலும், உற்றார், உறவினர் வீடுகளிலும் தங்கியுள்ள இடம் பெயர்ந்த மக்கள் தாம் விட்டுவந்த இடங்களுக்குத்திரும்பிச் செல்வதற்கான சூழ்நிலைகளை உருவாக்கிக்கொடுக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்தினுடையது

ஆனால் தமிழ்ப்பகுதிகளில் இருந்து வெளியேறிய சிங்களமக்களைமட்டும் அவசரமாக மீண்டும் பழைய இடங்களுக்கு அனுப்பி வைக்கவும் அதற்கான சூழ்நிலையை ஏற்படுத்தவும் அதிகாரிகள் கவனம் எடுக்கும் அளவுக்கு அப்பகுதிகளிலிருந்து வெளியேறிய தமிழ் மக்கள் விடயத்தில் கவனம் எடுக்கவில்லையென்பது பெரும் புகாராக இருந்து வருகின்றது.

நாட்டில் அமைதியும் சமாதானமும் மீளவும் நிலைகொள்ளவேண்டுமென அரசு விரும்புமானால், அந்த அடிப்படையில் தான் இந்த ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது என்ற கூற்று உண்மையானால் குடிபெயர்ந்தமக்கள் மீளவும் தம் இருப்பிடங்களுக்குத் திரும்பச் செய்யும் விடயத்தில் மிகுந்த நிதானத்துடனும் நியாயத்துடனும் நடந்து கொள்வது அவசியம். அவ்வாறு செயல்படக்கூடியவர்களையே இதற்கு பொறுப்பாகவும் நியமித்திடவேண்டும்

அரசியல் நோக்கமும், இனக்குரோதமும் இதில் தொடர்ந்தும் தலைகாட்டுவதாயின் நிச்சயமாக எதிர்பார்க்கப்பட்ட அமைதி நிலைபெறமுடியாது.

அகதிமுகாம்களில் தங்கியுள்ள மக்களுக்கு நெருக்குதல் கொடுத்து மீண்டும் பழைய இடங்களுக்குத் திரும்பச் செய்யும் முயற்சிகளும் கைவிடப்படவேண்டும். அம் மக்கள் நம்பிக்கையுடன் மீளவும் தம் மாமூல் வாழ்க்கையை ஆரம்பிக்கிட முடியும் என்ற உணர்வினை பெறும் வகையில் நிலைமைகள் உருவாக்கப்படுவதே வரவேற்கக் கூடியது.

இம்மாத இறுதியுடன் அரசு நடத்திவரும் அகதிமுகாம்களை மூடிவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருப்பதாக ஒரு செய்தி கூறுகின்றது இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் பின்னர் வடக்கு கிழக்கு பகுதியில் அமைதி நிலவுன்றது என்பதை மட்டும் கருத்தில் கொண்டு புனர்வாழ்வு அமைச்சு இந்த முடிவுக்கு வந்திருக்குமானால் அது கவலைக்குரியது. அப்பகுதிலிருந்து வெளியேறிய சிங்கள மக்கள் மாத்திரமல்ல தமிழ் - முஸ்லிம் மக்கள் முதலில் தம் இருப்பிடங்களுக்கு நம்பிக்கையுடன் திரும்பிட வசதியிருக்கவேண்டும்.

ஊர்காவல் படைகளையும் ராணுவமுகாம்களையும் தொடர்ந்து வைத்துக் கொண்டு அப்பகுதியில் தமிழ்மக்களை மீண்டும் போய் குடியேறும்படி கோருவது நியாயமாகாது. அந்த இடங்களைவிட்டு வெளியேறுவதற்கு காரணமாக இருந்தவர்களை இன்னும் அங்கே வைத்திருக்கும் போது இம்மக்கள் எங்ஙனம் நம்பிக்கையோடும் பயமின்றியும் பழைய இடங்களுக்குத் திரும்பமுடியும்?

எனவே அரசும், அரச அதிகாரிகளும் எதிர்வரும் தேர்தல்களை மனதில் கொண்டு செயல்படாமல் நாட்டின் நலனையும் எதிர்கால சுபிட்சத்தையும் கருத்தில் கொள்ள வேண்டும். தமிழரோ சிங்களவரோ இருபகுதியினரும் இந்நாட்டுமக்களே. இவர்களில் உண்மையில் பாதிக்கப்பட்டவர்களுக்கே முக்கிய இடம் கொடுத்திட வேண்டும்.

இன்றைய தினம் புனர்வாழ்வு அமைச்சின் செயலாளர் திரு. ஒஸ்டின் பெர்னாண்டோ பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் அரசாங்க அதிபர்களைச் சந்தித்து அகதிமுகாம்களை மூடிவிடுவது தொடர்பாக பேசும்போது மேற்படி விடயங்கள் கவனத்தில் கொள்ளப்படும் என்று நம்புவோம்.

# இரட்டை சகோதர சகோதரிகள் திருமணம்

[மாஸ்கோ]

சோவியத் யூனியனில் இரட்டைச் சகோதரர் இருவர் இரட்டைச் சகோதரிகள் இருவரைக்கடந்தவாரம் திருமணம் செய்து கொண்டனர்.

சோவியத் இராணுவ அரசியல் கல்லூரியில் பயிலும் ஒரே உருவ ஒற்றுமையைக் கொண்ட நாஸ்ரோவ் சகோதரர்கள் பாலர் பாடசாலையில் பணிபுரியும் ஆசிரியைகளான கலினா, மரினா என்ற இரட்டை சகோதரிகளை விரும்பித் திருணம் செய்து கொண்டனர்.

தற்போது இந்த இரட்டை புதுமணத் தம்பதிகள் ஒரேவீட்டிலேயே இருந்து வருவதும் குறிப்பிடத்தக்கது. [சி

உலக அரசியல் — அவதானி

# உலகின் இருவல்லரசுகளும் அணுஆயுதக் குறைப்பில்

## ஒற்றுமை காணும் சாத்தியங்கள் உருவாகின்றன!

### இந்திய - இலங்கை ஒப்பந்தம்

அமெரிக்க பாராளுமன்றத்தின் இரு சபைகளும், அமெரிக்க காங்கிரஸ் என்ற பேரில் இந்திய – இலங்கை உடன்பாட்டை உளமாரப் பாராட்டி இருக்கின்றன. தமிழரும், சிங்களவரும் நெடுங்காலம் பட்டபாடும் கெட்டகேடும் தங்களை வருத்திவந்ததாயும், இன்று உதயமான முடிவு, இந்த அழகான சிறு நாட்டுக்கும் மக்களுக்கும் மிக அவசியமான அமைதியும் ஒற்றுமை வாழ்வும் கொண்டுவருமென நம்புவதாகவும், அமெரிக்க அரசும் மக்களும் இலங்கை ஜனாதிபதி ஜெயவர்த்தனவுக்கும் இந்தியப் பிரதமர் ராஜீவுக்கும் பாராட்டும் வாழ்த்தும் தெரிவிக்கும்படி ஜனாதிபதி றீகனைக் கோரும் தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றியுள்ளன.

### சர்வதேச உதவி நிதி

பாரிய அழிவுக்குட்பட்ட இலங்கையின் புனரமைப்புக்கு சர்வதே உதவி திரட்ட, குறிப்பாக போரால் பாதிப்புற்ற பிராந்தியங்களில் 'நோர்மல்' வாழ்வு சிறப்படைய ஐக்கிய அமெரிக்கா ஏனைய நாடுகளுடன் சேர்ந்து தேவைப்படும நீதியுதவ முன்வரவேண்டும் என்றும் இத்தீர்மானம் கூறுகின்றது.

மூன்றும் உலக நாடுகளுக்கு மட்டுமல்ல, உலகின் வல்லரசுகளுக்கே இந்த ஒப்பந்தம் ஒரு முன்மாதிரியாகும். உலக சமாதானத்துக்கு மிக அவசரமான அணு ஆயுத குறைப்பு உடன்பாடு இரு வல்லரசுகளுக்குமிடையே பூரணப்படுத்துவதற்கு நிலைமைசுமுகமாக இருக்கின்றது என மாஸ்கோ செய்தி வெளியிட்டிருக்கிறது.

இலங்கைக்குக் கிடைத்து வந்த சர்வதேசக் கண்டனம் இன்று புகழ்மாலையாக மாறிவிட்டது அமெரிக்க காங்கிரஸின் பாராட்டு, றீகனும், கொபர்ச்சேவும் இணக்கம் கொண்டு, நடுத்தர ஏவுகணைகளை அகில உலகிலுமிருந்து அகற்றும் உடன்பாட்டைத் தூண்டுகிறது.

# 'ஐ நா' பலவீனங்கள்என்ன? அவற்றின்காரணம் என்ன?

## இவற்றினை நன்கு அறிந்த நிபுணர் பிறின்ஸ்அகாகான் தரும்கருத்துக்கள்;

உலகின் இரண்டு வல்லரசுகளும் ஓரளவிற்காவது விட்டுக் கொடுக்க முடியுமானால், ஐ நா. தனது கடமைகளில் துரிதமான முன்னேற்றம் காணும்.

உலகின் விஞ்ஞான மேதை ஐன்ஸ்டீன் சொன்ன கருத்தில் உண்மையுண்டு. ''உலகில் எல்லாவற்றிலும் மாற்றம் காணப்படுகிறது. மனிதன் பட்டுமே போன வழியில் போகிறான்'' அதற்கு உதாரணமாக ஐ நா. வே முன்னிற்கின்றது. பழைய கருத்துக்களைப் பாடம்பண்ணவேண்டிய நிர்ப்பந்தம் ஐ நா தலைமையகத்தின் நிபுணர்களைப் பீடித்திருக்கிறது

ஐ. நா வின் பொருளாதார நிலைமை குன்றிவருவதும் ஒரு காரணம். ஐ. நா.வின் பணி பிரமாதமாக இருப்பதால் பங்குபற்றும் செல்வந்த நாடுகள் தாராளமாக நிதியுதவ வேண்டும். நிதி நெருக்கடி என்றால், தனியார் ஸ்தாபனங்களே அதனை ஒரு சவாலாகக் கொண்டு ஒரு புதிய நிருவாக முறையைச் செயற்படுத்தத் துணிகின்றன. இந்தப் போக்கு ஐ. நா வில் இதுவரையும் இடம்பெறவில்லை. உலகம் ஐ. நா வைப் பார்த்தபடியே இருக்கிறது. ஆனால் ஐ. நா. அலங்கார சூழ்நிலையில், உலகின் தொல்லைகள், துன்பங்களிலிருந்து பாதுகாக்கப்பட்டிருக்கிறது. அங்குவரும் முறைப்பாடுகள் எல்லாம்; பேப்பர் வேலையும் வாதமும் பிரதிவாதமுமே.

உடனடித் தீர்வுக்கு, நிவாரணத்துக்கு உகந்த நிர்வாகம் இன்னும் அங்கு இல்லை.

### அகதிகள் பிரச்னை

மேற்கு நாடுகளுக்கே அகதிகள் பிரச்னை அதிக தாக்கத்தை ஏற்படுத்துவருகிறது. இது உண்மையில் பெரிய பிரச்னே; ஏனென்றால் பலவசதிபடைத்த நாடுகள்தானும் அங்கு வந்து குவியும் அகதிகளின் முடிவற்ற தொகையை ஏற்றுக்கொள்ளும் சக்தியில்லாதிருக்கின்றன.

வறிய நாடுகளின் அபிவிருத்திக்கு உதவும் செல்வந்த நாடுகளும், நிறுவனங்களும் அங்கு அபிவிருத்தி சரியான முறையில் நடைபெறுவதற்குரிய உதவியளிக்கவேண்டும். வறிய நாடுகள் அவ்வுதவியால் வளம் பெற்றால் இவ்வளவுபெரிய படையெடுப்பு - அகதிகள் பேரில் நிகழாது.

தொழில்நுட்பஉதவிநாட்டின் வறுமையையகற்ற, தொழில் வளம் பெருகக் கூடியதாக இருக்கவேண்டும். அதனை நாடாது, அகதிகளென்று வருபவரை, எண்ணிறந்த கட்டுப்பாடுகளால் தடுத்துவைத்தல் செல்வந்தநாடுகளுக்கு அழகல்ல; இயலாது போவதுகூட. பாரதூரமான நோய்க்கு அஸ்பிறின் கொடுப்பதுபோலாகும், இது.

### மூளை வெளியேற்றம்

'மூளை வெளியேற்றம்' என்ற நோய் மூன்றும் நாடுகளை வருத்திவருகிறது. இதற்கு இந்த நாடுகளே பரிகாரம் காணவேண்டும்!

செல்வந்த நாடுகளிலிருந்து மக்கள் வெளியேறுவதில்லை. மனித சிவில் அரசியல் உரிமைகள்என்று மறுக்கப்படுவது காரணம் என்றால், அவை, நாட்டின் பொருளாதார சமுதாய உரிமைகளிலிருந்தே எழுகின்றன

எந்தெந்தத் துறைகளில் நிபுணர் வெளியேறுகின்றனர்? அவற்றை இனங்கண்டு, அதனை மட்டுப்படுத்த, அரசாங்கங்கள் தம்மாலியன்றளவுக்குப் பாடுபடவேண்டும். நாட்டுப்புறங்களைப் புறக்கணித்தால் மக்கள் நகரை நாடுவது இயல்பு; நகருக்கு நகரப் பழகியவர் அங்கிருந்து உலகின் எந்த மூலைக்கும் போகத் தயங்கார்.

இலங்கை, குறிப்பாக யாழ்ப்பாணம் இதற்கு உத்தம உதாரணம். பரம்பரை பரம்பரையாக வாழ்ந்துவந்த கிராம மக்கள் குடிபெயரத் துணிவதை முளையோடு கிள்ளவேண்டும். மக்களை; அவர்களின் சொந்த இடங்களில் வாழவைப்பதே சுதந்திர நாடுகளின்,சிறப்பான ஆட்சி.

திரைகடலோடப் பழகிய கூட்டம் திரவியம் சம்பாதித்த போதும். வீடு திரும்பாதுஇருப்பதுடன் வாழையடி வாழையெனவந்த திருக்கூட்டத்தைப் பேய்க் கூட்டமென்றும் நையாண்டி செய்கின்றனர். ஒரு சமுதாயய அழிந்துபோகும் வழி, இது.

★

### பிராந்திய ஒத்துழைப்பு

மூன்றும் உலக நாடுகளின் பிரதான தேவை-அபிவிருத்தி-இதனை ஒரு மந்திரமாக அனைவரும் ஜெபிக்கின்றனர்; ஆனால் முடிவு அபகீர்த்தி. மூன்றும் உலக நாடுகளின் தேவைகள் பல பொதுவானவை. இவற்றை இந்த நாடுகள் பிராந்தியரீதியில் அணுகினால்; ஒருவருக்கொருவர் உதவலாம். தான்ஸோனியாவின் புகழ்பெற்ற முன்னை நாள் சோஷலிஸத் தலைவர் யூலியஸ் நயரேரே இதற்காக 'தெற்கு-தெற்கு கமிஷன்' என்ற ஒரு மன்றத்தை ஜெனிவாவில் நிறுவியிருக்கிறார். அது வெற்றி காணவேண்டும்.

### தீவிர மாற்றம்

செல்வம் சேகரிப்பது மட்டும் அபிவிருத்தியாகாது. செல்வம் கொழிக்கும் வடக்குநாடுகளிலும் பார்க்க, ஆபிரிக்க நாடுகளின் கிராமங்களில் வாழும் மக்கள், உலகளாவிய அறிவுடையவர்களாக- ஏனையோரின் வாழ்க்கை முறையை மதிப்பவர்களாயிருக்கின்றனர்- 'இதுவே அபிவிருத்தியின் அறிகுறி: மற்றவரின் பெருமையை மதிக்கும் பண்பு அபிவிருத்தியின் முக்கிய குறிக்கோள் வேற்றுமையின் அவசியம்; அதில் ஒற்றுமை காணும் மனோபாவம்-மக்களுக்குண்டென்றால் அந்த நாடு அபிவிருத்தியில் முன்னேறுகிறது. வேறு நாட்டு, அதுவும் மேனாட்டு நிபுணர்களை இறக்குமதி செய்யும் திட்டங்கள் அபிவிருத்திக்குதவா...... எனவே மாற்றம் உருவாக சிந்தனைப்புரட்சி தவிர்க்கேலாது.

# யாழ்—நெடுங்கேணி புதிய பஸ்சேவை

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணத்திலிருந்து நெடுங்கேணிக்கு புதிய பஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இச்சேவை தினமும் காலை 7-45க்கு யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்டு மாங்குளம் ஒட்டுசுட்டான் வழியாக நெடுங்கேணிக்குச் சென்று திரும்பும்.

இச்சேவை நெடுங்கேணி கிராமோதயசபைத் தலைவர் ரி எம். பீற்றர்பொன்கலனின் பெருமுயற்சியால் ஆரம்பிக்கப்பட்டது

காரை நகரில் இருந்தும் ஒரு சேவைவிரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

# மக்கள் வங்கி விரைவில் பணப் புழக்கம் ஆரம்பிக்கும்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணத்தில் மக்கள் வங்கிக்கிளைகளில் மீண்டும் விரைவில் பணக்கொடுக்கல் வாங்கல்களை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதுசம்பந்தமாக கொழும்பிலுள்ள மக்கள்வங்கி உயரதிகாரிகளைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்துவதற்கென வடபிராந்திய மக்கள் வங்கி முகாமையாளர் திரு. எம். கணேசசுந்தரம் நேற்று கொழும்புசென்றார்.

இதேவேளையாழ் நவீனசத்தை கட்டிடத்தில் முன்னர் இயங்கி வந்த மக்கள் வங்கிக்கிளை நேற்றுமீண்டும் திறக்கப்பட்டுள்ளது.

# இப்படியும் நடக்கிறது

'ஜனநாயக மரபு'களைப் பாதுகாக்கும் அந்தக் கட்டிடத்தில் அசம்பாவித சம்பவம் நடந்ததும், இருவர் உயிரிழந்ததும், சிலர் படுகாயமடைந்ததும் தெரிந்த சமாச்சாரமே.

நலம்பெற வேண்டும் என்று நாட்டின் ஒரு பகுதி மக்களின் பிரார்த்தனைக்குள்ளாகியிருக்கும் 'லலித' நாயகன்; அன்று படுகாயமுற்று ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டதும் அவருக்குச் சத்திரசிகிச்சை செய்ய வேண்டியிருந்தது.

அந்த ஆஸ்பத்திரியில் அதிமுக்கிய வைத்திய நிபுணர்கள் இருவர் இருந்தனர் ஒருவர் 'த'ம்பிப்பிள்ளை, மற்றவர் 'சி'ன்னத்தம்பி.

படுகாயமுற்று ஆஸ்பத்திரியிலிருந்த 'லலித' நாயகன் அப்பொழுது சுயநினைவிலேயே இருந்தார்.

'த'ம்பிப்பிள்ளையை நான் அறிவேன். எனக்கு அவரே 'ஒப்பரேஷன்' செய்யட்டும் என்றாராம் அவர்.

என்ன புரிகிறதா....................?

—ஊடுருவி

## கோஷ்டி மோதல்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நிதிகளும் 12 சக்கை, 25டைனமிட்டு, 3ஷெல்கள், 5வாள் மற்றும் பைப்புகள் உட்பட பலரக ஆயுதங்களை விடுதலைப்புலிகளிடம் கையளித்தனர்.

தமது பாதுகாப்பை விடுதலைப் புலிகள் உடனடியாகப் பொறுப்பேற்பதால் தங்கள் வசமிருந்த ஆயுதங்களை ஒப்படைப்பதாக இருபகுப் பிரதிநிதிகளும் தெரிவித்தனர்

கொட்டடிப் பகுதியில் எரிக்கப்பட்ட வீடுகளை புனரமைத்துக் கொடுப்பதற்கு விடுதலைப் புலிகளுடன் தாமும் பங்கெடுத்துக் கொள்வதாக நாவாந்துறை பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

கடந்த மூன்று நாட்களாக இடம்பெற்ற கோஷ்டி மோதலில் இருபகுதியிலும் லட்சக் கணக்கான ரூபா நஷ்டமேற்பட்டுள்ளதுடன் பலவீடுகள் வலைகள் என்பன சேதமாக்கப்பட்டுள்ளதுடன் ஒன்பதுபேர் வரையில் காயமடைந்துள்ளனர்.

இருபகுதியினரும் சமாதானமாக வாழவேண்டும் என்றும் இனிமேல் ஏதாவது பிரச்னைகள் ஏற்பட்டால் அந்தப்பகுதியிலுள்ள விடுதலைப் புலிகளின் பிரதேசக் காரியாலயத்திற்குத் தெரிவிக்கவேண்டுமென்றும் இ. திலீபன் கேட்டுக்கொண்டார்.

## மியான்டாட்

(3ம் பக்கத் தொடர்ச்சி)

தமது நிபந்தனைகள் என்னவென்று குறிப்பிடாத போதிலும் மியான்டாட் பாக் கிரிக்கெட்கட்டுப்பாட்டு சபையினரால் மோசமான முறையிலேயே இங்கிலாந்து விஜயத்தின்போது நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

[சி]

## ஓராண்டு நினைவஞ்சலி



கொக்குவில் பொற்பதி வீதியைச் சேர்ந்த

**திருமதி கந்தையா நல்லம்மா**

தோற்றம்; 3-5-1909
மறைவு: 14-9-1986
திதி; 3-9-1987

அம்மா, ஓராண்டுஉருண்டோடிவிட்டது இது போன்று பல ஆண்டுகள் உருண்டோடும். நாம் வாழும் போதெல்லாம் தங்கள் நல்லுரை, நல்வழி, நற்பண்புகள் ஆகியவற்றை உள்ளத்திருத்து வாழ்வோம். ஆடலே புரியும் அம்பலக் கூத்தன் குஞ்சிதபாத நிழல் தங்களுக்குப் பேரின்பத்தைத் தருமெனஎண்ணிஅமைதியடைகின்றோம். இன்று தங்கள் சிராத்ததினம் உற்றார், உறவினரை அழைத்து ஆத்மசாந்திப் பிரார்த்தனை நடைபெறும் வேளையில் தங்கள் ஆசீர்வாதம் எல்லோருக்கும் கிடைக்கட்டும். எங்களை வாழ்த்துங்கள். சாந்தி, சாந்தி, சாந்தி.

க. பூபாலசிங்கமும்,
மனைவி மக்களும்.
பொற்பதி வீதி,
கொக்குவில். (சி 08-3)

## தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்கம்

(வரையறுக்கப்பட்டது)

## கேள்விப்பத்திரம்

மேற்படி எமது சங்கத்தில் 10.000 வெற்றுச்சாக்குகளும், 1500 வெறும் பைகளும் கேள்விப்பத்திரம் மூலம் விற்பனைக்குண்டு. மேலும் முழு விபரங்களும் கேள்விப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. ரூபா 500/- வைப்புப்பணமாக தலைமைக் காரியாலயத்தில் செலுத்திக் கேள்விப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளவும். கேள்விப்பத்திர விண்ணப்பம் 10-09-1987ம் திகதி வியாழக்கிழமை பி.ப. 4-00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபாலில் பொதுமுகாமையாளர், தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்கம், தெல்லிப்பளை என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல்வேண்டும். தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் "வெற்றுச்சாக்கு கேள்விப்பத்திரம்" எனக் குறிப்பிடல்வேண்டும். கேள்விப்பத்திரம் உபசபையினர் முன்னிலையில் 10-9-1987 பிற்பகல் 4-00 மணிக்கு திறக்கப்படும்.

பொதுமுகாமையாளர்,
ப. நோ. கூ. சங்கம்,
தெல்லிப்பளை.
(ஏ-2161)


# VACANCY

Wanted an experienced Clerk — Typist RRF—1983 Office. Y. M. C. A Building, Jaffna Apply with bio data before 10-th Sept. 1987.

TREASURER.

(A-2163)

## 31—வது நாள் நினைவஞ்சலி



அமரர்

**திரு பொன்னையா இராஜசிங்கம்**

(ஓய்வுபெற்ற நீதிமன்ற செயலாளரும், மேலதிக பிரதிபி F ஸ்காலும்)

தோற்றம்; 17-11-1921
மறைவு: 05-08-1987
(மு. ப 3 மணி)

எமது குடும்ப ஒளிவிளக்காய்த் திகழ்ந்து எல்லோரையும் அன்பாகநேசித்து பல அறிவுரைகளைவழங்கி எமக்கு வழிகாட்டியாக இருந்த நீங்கள் திடீரென எம்மையெல்லாம் பரிதவிக்கவிட்டு எங்கு சென்றீர்களோ? உங்கள் பிரிவைத் தாங்கமுடியாமல் தினமும் வாடும் நாம் என்றும் உங்கள் நினைவாகவே இருந்து உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனை பிரார்த்திக்கின்றோம். குறிப்பு: அன்னாரின் மரணச் சடங்கில் கலந்தும், அனுதாபச் செய்திகளை அனுப்பியும் எமது துயரில் பங்குகொண்ட உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மனைவி, மக்கள்,
மருமகள்.
(சி 0836)

## அழைப்பு

திரு. திருமதி N. S. கந்தையாவின் மகன்
குகேந்திரனுக்கும்
திரு. திருமதி யோகராஜாவின் மகள்
மஞ்சுளாவுக்கும்

30-8 87 அன்று கொழும்பு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் திருமணம் நடைபெற்றது.

3-9-87 வியாழக்கிழமை [இன்று] உயரப்புலம் ஆனைக்கோட்டையிலுள்ள மணமகன் இல்லத்திற்கு உறவினர்களும் நண்பர்களும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

திரு. திருமதி N S கந்தையா,
திரு. திருமதி யோகராஜா,
[சி-0831]

## வயிற்றோட்டம்: 10 மாத குழந்தை பலி!

(யாழ்ப்பாணம்)

வயிற்றோட்டம் காரணமாக யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த இன்னுமொரு குழந்தை நேற்றுமுன்தினம் மரணமடைந்தது

பாஷையூரைச் சேர்ந்த சிவலிங்கம் விஜயசீலன் என்ற பத்து மாதக் குழந்தையே மரணமானதாகும்.

இந்நோயினால் கடந்த மாதம் மொத்தம் 15 குழந்தைகள் யாழ் ஆஸ்பத்திரியில் மரணமடைந்துள்ளனர்.

ஆஸ்பத்திரியில் தற்போது முப்பத்திமூன்று குழந்தைகள் இந்நோய் சம்பந்தமாக வார்ட்டில் சிகிச்சை பெறுகின்றனர்.

(கு)

## கடைசி நேர வரிவிளம்பரம்

### தவறிவிட்டது

முருகேசபிள்ளை சிவராணி என்பவர் தன்னுடைய 626471552 V தேசிய அடையாள அட்டையும், யாழ் பல்கலைக்கழக அடையாள அட்டையும், கன்ராபியா இன்ஸ்ரியூட் அடையாள அட்டையும், சிறுதொகைப்பணமும் கொண்ட பேர்சை 789 பாதை இலக்கம் கொண்ட மினிவானில் 31-8 87ல் காலை 9மணியளவில் பிரயாணம் செய்யும் போது தவறவிட்டுள்ளார். கண்டெடுத்தவர்கள் தயவு செய்து நா. முருகேசபிள்ளை சிவபவனம், அராலி தெற்கு வட்டுக்கோட்டை என்ற முகவரியில் அல்லது க செல்வநாயகம் 695, மானிப்பாய் வீதி யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைக்கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

[சி 0839)

## எமது நேற்றைய புதிய வெளியீடுகள்

(பழைய படங்கள்)

1. அவள் ஒரு தொடர்கதை
2. உத்தரவின்றி உள்ளே வா
3. நல்ல நேரம்
4. தாய்க்குப் பின் தாரம்
5. மதுரையை மீட்ட சுந்தரபாண்டியன்
6. தீபம்
7. பைலட் பிரேம்நாத்
8. நம்நாடு
9. தெய்வ மகன்
10. படிக்காத மேதை

அனைத்தும் A பிரதிகள்

உங்கள் RECORDING ஓடர்களை முன்கூட்டியே பதிவுசெய்துகொள்ளுங்கள்.

**குணம் வீடியோ சென்ரர்,**
42, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி:- 23665

[ஏ-2162]

## மதி ஜுவல்லறி

ஸ்தாபனத்தார் மீண்டும்
தமது நகை வியாபாரத்தை
226, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணத்தில்
ஆரம்பித்திருக்கிறோம் என்பதை
வாடிக்கையாளருக்கு மிகுந்த
மகிழ்ச்சியுடன் தெரியத்தருகிறோம்.

**மதி ஜுவல்லறி**
ஸ்தாபனத்தார்,
யாழ்ப்பாணம்.

[சி-841]



கடந்த திங்கட்கிழமை ரயிலில் வந்த ரயில்வே பொறியியலாளருக்கு 'சற்றடேறிவியு' ஆசிரியர் திரு. காமினி நவரத்தின மாலை அணிவித்து வரவேற்கிறார்.

## தமிழ் நாடு பயணம்

(யாழ்ப்பாணம்)

சித்தங்கேணி யப்னிஸ் இசைக்குழு ஸ்தாபகர் கவிஞர் மகேஸ்வரன், தமிழ்நாட்டில் இசை நிகழ்ச்சிகளை நடாத்துவதற்காக இம்மாதம் அங்கு செல்லவிருக்கிறார்.

இவர் இயற்றியுள்ள 30 தமிழ் பாடல்களும், 3 ஆங்கில பாடல்களும், நூல் வடிவில் வெளியிடப்படவுள்ளது.

கடந்த வருடம், தமிழ்நாடு சென்ற இவர், அங்கு பங்குபற்றிய இசை நிகழ்ச்சிகளில் தாமே இயற்றிய பாடல்களைப் பாடி, பாராட்டுப்பெற்றார். இவரது நான்கு பாடல்கள், திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள 'சௌந்தராலாறி' இசைக்குழுவினரின் பதிவு நிலையத்தில் பதிவு செய்யப்பட்டன. இவரின் இசை நிகழ்ச்சியொன்று வீடியோ திரைப்படத்திலும் இடம்பெற்றுள்ளது.


இடமாற்றம்
கொழும்பு ஸ்ருடியோ
ஸ்ரான்லி வீதி
20-08-87 முதல்
[வெலிங்டன் சந்திக்கு வடக்கே] 55, மணிக் கூட்டு வீதிக்கு மாற்றப்பட்டுள்ளது. ஏ-2086

கலர் பிலிம் சுருள்களை இரண்டு நாட்களில்
PROCESSING & PRINTING
நவீனமுறையில் செய்து தருபவர்கள்.
கொழும்பு ஸ்ருடியோ
55, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
[5] ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு மாதாந்தம் கலர்பிலிம் சுருள் இனம். ஏ2084

ஆரம்பமாகிவிட்டது!
88 DAY CLASS பிரிவு I
(எமது வழமையான ஆசிரியர் குழுவினால்)
திங்கள் --> வெள்ளி (8.30-12.30)
New Master Institute
B. M. C Lane, Jaffna. (ஏ2152)

அறிவித்தல்
அனேகமானோர் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும்
ABLE TECHNICAL STUDIES
ஆல் நடத்தப்படும்
Computer Programming in
★ BASIC LANGUAGE ★
(with File handling)
5-9-87 சனிக்கிழமை ஆரம்பமாகும்.
சாவகச்சேரியில் 9-00 a-m சுன்னாகத்தில் 2-00 p-m இளவாலையில் 4-00 p-m
DIRECTOR.
சி-0775


## விளையாட்டு வினையானது

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவில் துப்பாக்கி ரவை ஒன்றை ஆணி வைத்து அடித்த சிறுவன் அது வெடித்ததால் தனது ஒரு கண்ணையும் இழந்து உடம்பின் பல பாகங்களிலும் காயமுமடைந்துள்ளான்.

அண்மையில் கணேசலிங்கம் செல்வகுமாரன் என்ற (14 வயது) சிறுவன் நண்பர்களுடன் விளையாடிக்கொண்டிருக்கும்போது கண்டெடுத்த வெடிக்காத துப்பாக்கி ரவையை அதன் அடிப்பாகத்தில் ஆணியொன்றை வைத்து கல்லால் அடித்தபோது அது திடீரென வெடித்து சிதறியதில் கண்ணை இழந்து காயமடைந்த நிலையில் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (கு)

## இரட்சணிய சேனையின் புதிய தலைவர்



தற்போது இரட்சணிய சேனையின் முக்கிய காரியதரிசியாக கடமையாற்றும் கர்ணல் பீ ஏ. வி. பெரேரா செப்டம்பர் முதலாம் திகதி தொடக்கம் மாகாண தளபதியாக நியமிக்கப்பட்டுள்ளார். இதனை முன்னிட்டு நடைபெறும் புதிய பதிவியமர்வு ஆராதனையில் பங்குகொள்வதற்காக இரட்சணியசேனையின் உலகத் தலைவியின் பிரதிநிதியாக இந்தோனேசியாவைச் சேர்ந்த கமிஷனர் ஹர்மன் ஜீ பட்டி பிலோஹ் வருகைதர உள்ளார். இந்த விசேஷ ஆராதனை கொழும்பு 2ல் உள்ள இரட்சணியசேனை மத்திய மண்டபத்தில் மாலை 6-00 மணிக்கு நடைபெறும்.

கர்ணல் பெரேரா அவர்கள் 1947ம் ஆண்டு இரட்சணிய சேனை பயிற்சிக் கல்லூரிக்குள் பிரவேசித்து அதேவருடத்தில் சுவிஷேசத்தைப் பிரசங்கிக்கும் ஊழியக்காரனாக பட்டாபிஷேகம் செய்யப்பட்டார்.

இவர் தனிமையாக பலவருடங்கள் ஊழியம் செய்தபின் 1959ம் வருடம் காப்டன் மொரின் பெரேராவை தனது துணைவியாராக ஏற்றுக்கொண்டு திருமண வாழ்விற்குள் உட்பிரவேசித்தார். சுவிஷேசத்தின் நிமித்தம் கர்ணல் பெரேரா படைஸ்தல உத்தியோகஸ்தனாக, சமூகசேவை உத்தியோகஸ்தனாக பணக்கணக்காளராக, நிலப்பொறுப்பதிகாரியாக இன்னும் பல முக்கிய ஸ்தானங்களை வகித்து இரட்சணிய சேனை சம்பந்தப்பட்ட ஊழியங்களில் நன்கு அனுபவமுடையவராக திகழுகின்றார்.

திருமதி கர்னல் மொரின் பெரேரா அவர்கள் மாதர் சங்கம் சம்பந்தப்பட்ட வேலைகளில் அயராது உழைப்பவர், இவர் கருணை சங்கத்தின் காரியதரிசியாகவும், இரட்சணிய சேனை மாதர் சங்க காரியதரிசியாகவும் கடமையாற்றி சகலரையும் அரவணைத்து தேவைகளை பெற்றுக்கொடுப்பதில் அதிகம் அக்கறை கொண்டு செயல்படுபவர்.

காப்டன்
பா. ஜெயரட்ணசிங்கம்



ஒன்றரை வருட காலத்தின்பின்னர் யாழ் வந்த பெருந்தொகையான பயணிகளில் ஒரு பகுதியினரையே இங்கு நீங்கள் பார்க்கிறீர்கள். படங்கள்: செந்தில்.

முல்லைத்தீவில்—

## சிங்களக்குடியேற்றத்தை எதிர்த்து ஊர்வலம்!

(முல்லைத்தீவு)

சிங்களக்குடியேற்றத்தை எதிர்த்து செலாவத்தை சந்தியிலிருந்து ஆரம்பமாகிய ஈழவர் முன்னணி ஊர்வலம் முல்லைத்தீவு அரசாங்க அதிபர் பணிமனையை சென்றடைந்தது இந்த ஊர்வலத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர்.

வடக்கு - கிழக்கு எல்லைப் பிரதேசங்களில் நடைபெறும் சிங்கள குடியேற்றங்கள் வாபஸ் பெற வேண்டும் என்றும் அவசரகால சட்டத்தை நீக்க வேண்டும் என்றும் கொக்குளாய் இராணுவ முகாம் அகற்றப்பட வேண்டும் என்றும் ஊர்வலத்தில் கோஷங்கள் எழுப்பினர்கள். முல்லைத்தீவு நீதிமன்ற வளவில் பொதுக்கூட்டம் நடைபெற்று மகஜர் ஒன்று முல்லைத்தீவு அரசாங்க அதிபரிடம் கையளிக்கப்பட்டது. [க]

## மன்னர் பஸ் நிலையத்தில் 1,10,000 ரூபா கொள்ளை!

### முகமூடி நபர்கள் கைவரிசை

(மன்னார்)

மன்னார் இ போ. ச. பஸ் நிலையத்தில் அமைந்துள்ள பட்டித் தோட்டத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு துணிகரக்கொள்ளை நடந்துள்ளது.

சுமார் பத்து முகமூடிக் கொள்ளையர்கள், ஆயுதங்களுடன் இ. போ. ச. சாலைக்கு சென்று அங்குள்ள காவலர்களையும் அலுவலர்களையும் கடுமையாக தாக்கிவிட்டு அன்றைய தினம் சேர்ந்த பணமான ஒரு லட்சத்திபத்தாயிரம் ரூபாவை கொள்ளையடித்து சென்றுள்ளனர்.

சேவையிலிருந்த காவலர்களும் அலுவலர்களும் மிகவும் மோசமாக தாக்கப்பட்டு மன்னார் ஆதாரவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதனால் மறுதினம் மன்னாரில் எவ்வித பஸ்சேவைகளும் நடைபெறவில்லை.

இந்திய அமைதி காக்கும் படையினரால்புலன்விசாரணைகள்மேற்கொள்ளப்படுகின்றன


Talent Contest

The Annual Y. M. C. A. Talent Contest (Western and Eastern Music) will be held on 26 th September, 1987 at Chundikuli Girls Gollege Applications close 12 th September, 1987. For details contact the Secretary.

Y. M. C. A., Jaffna.
A-2154

WANTED

Wanted a qualified and experienced CHEMIST to work in a Glass Factory on full time or part time basis.
Attractive salary will be paid to the right person. Call for an interview on 09-09-87 between 9 a. m. and 12 Noon with certificates.

The Peninsula Group,
Mahendra Glass Works Limited,
163, Kandy Road, Ariyalai, Jaffna. C-0823

சாமுண்டி அயன் வேக்ஸ்
598, மானிப்பாய் வீதி, ஓட்டுமடம்,
யாழ்ப்பாணம்.
வாடிக்கையாளர்களே! ஆதரவாளர்களே!
எம்மால் புதிதாக அமைக்கப்பட்ட ஸ்தாபனத்தில் 04-09-1987 தொடக்கம் தொழிற்தொடர்புகள் ஏற்படுத்திக் கொள்ளலாம் என்பதை அறியத்தருகின்றோம்.
உரிமையாளர்: பொ. பாலச்சந்திரன்
(குட்டிமாமா)
சி-0817

## Familian Institute Offers
## A Diploma Course in Home Economics

At Holy Family Convent Jaffna

9 மாதகால மனையியல் டிப்ளோமா பயிற்சி இம் மாதம் 15ம் திகதி ஆரம்பமாகவுள்ளது மேலதிக விப ரங்கட்கு பயிற்சி நிலையத்தில் தொடர்பு கொள்ளவும். நேரம்- காலை 8-30 தொடக்கம் நண்பகல் 12 மணிவரை

பிரதானவீதி,
யாழ்ப்பாணம்.

சி-0815



சலுகைக் கட்டணத்தில் குறுகிய காலத்தில்

## கம்பியூட்டர் கல்வி

COMPUTER PROGRAMMING IN BASIC LANGUAGE

பயிற்சிக்காலம்: 2 மாதம்

கட்டணம் 750/- மட்டும்
[பகுதி பகுதியாக செலுத்தலாம்]

சனி, ஞாயிறு 5 09-87
திங்., புதன், வெள்ளி 7-09-87

O/L படித்த இருபாலாரும் சேரலாம் சான்றிதழ் [Diploma] வழங்கப்படும்.

## Unikco Computer Centre

யாழ். ரோட் [சுதுமலைச்சந்தி] மானிப்பாய்.
KKS Road [3ம் கட்டை] கொக்குவில்
சுஸாந்தி கல்விநிலையம் [23 டச்ரோட்] சாவகச்சேரி.

[சி 0821]


## பதவி வெற்றிடம்

பதவி: காசாளர் (நிரந்தரம்) 306/13

தெல்லிப்பழை தெ. ப. பொ. உ வி கூ. சங்கத்தின் காசாளர் பதவிக்கு கீழ்வரும் தகைமையுடையவர்களி டமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் யாவும், பொதுமுகாமையாளர், தெல்லிப் பழை தெ ப பொ. உ வி கூ. சங்கம், தபாற்கந்தோர் அருகாமை, தெல்லிப்பழை என்றவிலாசத்திற்கு நேரிலோ அல்லது பதிவுத்தபால் மூலமோ 10-09-87ம்திகதி பகல் 12-00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படவேண்டும். குறிப்பிட்ட திகதிக்கு பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. பதவிநியமனம் செய்யும்போது அனுபவத் திற்கும், சங்க எல்லைப் பரப்பிற்குள் வசிப்பவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

தகைமைகள்: க பொ. த. [சா. தரம்] ஆறுபாடங்க ளில் நான்குபாடங்களில் திறமைச் சித்தி, அத்துடன் 2 வருட அனுபவமும்.

சம்பள அளவுத்திட்டம்: 225—10x7 - 12.50x8 /-395 [அத்துடன் தற்போது சங்கத்தால் வழங்கப்படும் வாழ்க்கைப்புள்ளி அதிகரிப்பும்]

பொதுமுகாமையாளர்,
தெல்லிப்பழை தெங்கு பனம்
பொருள் உற்பத்தி விற்பனவு
கூட்டுறவுச் சங்கம்,
தெல்லிப்பழை.

01-09-87
—திகதி—
சி-0808


## AGROMAC LIMITED

அக்ரோமெக் லிமிடெட்

NSK பெயரிங் வகைகள்
NOK ஓயில் சீல் வகைகள்
BANDO V பெல்ட் a b c m
பேண் பெல்ட் வகைகள்
ஆகியவற்றுடன்
மக்கள் சீனக் குடியரசிலிருந்து
HORSE BRAND, DOUBLE LION
ரப்பர் ரோளர்கள், அரிசி ஹல்லர்கள்
பொலிசர்களுக்கு தொடர்பு கொள்ள வும்.

## அக்ரோமெக் லிமிடெட்,

449 1/1 டாலி ரோட்,
கொழும்பு - 10.

தந்தி: அக்ரோமெக் தொலைபேசி: இல. 598855, - 95408
(சி 0804) கொழும்பு.


## முதலிலேயே ஆக்கப்படும் முற்றுன கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

யாழ்ப்பாணம் சப்பல் வீதி, 48/1 ஐச் சேர்ந்த மேரி மக்டலீன் சந்தியாகோ என்பவரின் மரண சாதன விடயத்தில்

—மரணமெய்தியவர்.

மரண சாதன )
நியாயாதிக்கம் ) இல. 4037

1. அந்தோனிப் பிள்ளை அலெச்சாண்டர்,
2. மனைவி லலிதா இருவரும் 46/1, மாட்டின் வீதி, யாழ்ப்பாணம்.

—மனுதாரர்கள்.

மேற்சொன்ன இலக்கங் கொண்ட மரண சாதன வழக்கு மேலே பெயர் குறிப் பிட்ட மரணமெய்தியவரின் மரணசாதனத்தை எண்பிப் பதற்காக மேற்படி நீதிமன் றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க முதலி லேயே ஆக்கப்படும் முற்றுன கட்டளை பதியப்பட்டுள்ள தென இத்தால் அறிவிக்கப் படுகின்றது.

நீதிமன்றக்கட்டளைப்படி
க. குலசிங்கம்,
பதியாளர்.

1987 ஆவணி 27ம் நாள்.

சட்டத்தரணி:
வெ சு. நடராசா.
(சி-0680)

## 2-வது ஆண்டு நினைவஞ்சலி



**ஸ்ரீமான் வேலாயுதம் சிவயோகராசா (சிவா)**

தொழில் நுட்ப உதவியாளர் நீர்ப்பாசன இலாகா
இலாகா வவுனியா]

அன்னையின் மடியில்: 06-03-1946

கொடியவர் பிடியில்: 03-09-1985

எம்குடும்பம்தனை ஒளிர வைத்த பெரும் தகையே உங்கள் நலனை ஒறுத்து, வெறுத்து எம்மைக் காத்த சுடர் ஒளியே எம்மையெல்லாம் ஆளாக்கிய அருட்சுடரே தம்மைத் தியாகம் செய்து எம்மை மேலோங்க வைத்த ஒளிவிளக்கே உங்கள் பொறுமைகளைச் சாதித்து எங்களைக் கவர வைத்த கற்பகமே அனுராதபுரம் சென்று திரும்புகையில் பாதிவழியினிலே பாதகர் கையில் சிக்குண்டாய்! உமது உயிருக்கு ஊறு தான் நடந்ததோ, சதிகாரக்கும்பல் உம்மை எத்தனை சித்திர வதை செய்தரோ நாமறியோம் எம்மையெல்லாம் ஆருத்துயரில் ஆழ்த்தி விட்டு மின்னலென மறைந்து விட்ட அன்புத் தெய்வமே! உமது ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கின்றோம்.

குடும்பத்தினர்.

'அருள்வாசா'
உடுவில். [சி 0803

## விளையாட்டுப் போட்டி

[யாழ்ப்பாணம்]

பூநகரி, நல்லூர், ஆலங்கேணி 'எவரெடி' விளையாட்டுக்கழகம் நடத்தும் விளையாட்டுப்போட்டி இம்மாதம் 5ம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

திரு. ச. நடராசலிங்கம் தலைமையில் நடைபெறும் இவ் விளையாட்டுப் போட்டியில் கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு. கே. தேவசிகாமணி பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

## 31-வது நாள நினைவஞ்சலி



**திரு. சுப்பையா தம்பிஐயா**

மலர்வு: 10- 2- 1911
உதிர்வு: 4- 8- 1687

அன்பின் திருவுருவாய், அறிவின் சுடரொளியாய், பாசத்தின் பிறப்பிடமாய், சிரிப்பின் நிறைமதியாய். குடும்பத்தின் ஒளிவிளக்காய், வாழ்வின் வழிகாட்டியாய்த் திகழ்ந்து எம் அனைவரையும் ஆறாத் துயரியல் ஆழ்த்திவிட்டு மறைந்த எம் அன்புத் தெய்வமே தங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்,

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள். உற்றார், உறவினர்கள்.

136/4, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்,
(சி-0798)

## தகவல் தாருங்கள்



பேராதனை வளாகத்தில் இறுதி ஆண்டு பொறியியல் துறையில் கல்வி கற்ற எனது மகன் தெட்சணமூர்த்தியை (வயது 23) இலங்கை இராணுவத்தினர் 1-6-87 ல் அல்வாய் தெற்கு, அல்வாயில் எமது இல்லத்தில் வைத்துக் கைது செய்து அழைத்துச் சென்றனர். இதுவரை அவரைப் பற்றிய விபரம் தெரியவில்லை. விபரம் அறிந்தவர்கள் கீழ்வரும் விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும். மாணிக்கம், இலகடி, அல்வாய் தெற்கு, அல்வாய்.

## கேள்விப் பத்திரங்கள் -1987

எமது விற்பனை அபிவிருத்தித் திணைக்களத்தால் 1987 ஆம் ஆண்டின் 4வது காலாண்டிற்குரிய ஆஸ்பத்திரிகளுக்கும் நிறுவனங்களுக்கும் பாண், விறகு போன்ற பொருள்கள் விநியோகம் செய்வதற்கும், வாகன சேவைக்கும்கேள்விகள் கோரப்படுகின்றன. அதற்கான விண்ணப்பப்படிவங்களும் விபரங்களும் எமது பணிமனையில் நேரடியாகவோ, தபால் உறை மூலம் அனுப்பியோ பெற்றுக் கொள்ளலாம்.

இவ்விண்ணப்பப் படிவங்கள் பூர்த்தி செய்து மேலுறையின் இடதுபக்க மூலையில் "கேள்விப் பத்திரங்கள் — 1937" எனக் குறிப்பிட்டு எமது பணிமனைக் கேள்விப்பத்திரப் பெட்டியில் இட்டோ, அல்லது பதிவுத் தபால்மூலமோ 16 - 09 - 1987 திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கவும்.

சு. சண்முகரத்தினம்,
பிராந்தியக் கணக்காளர்.

பிராந்தியக் கணக்காளர் பணிமனை,
விற்பனைத் திணைக்களம்,
250, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

எ-2158


## விற்பனைக்கு

L.H.30 v. பசெஞ்சர் வான் பச்சைக் கலர், 15 சீற் உள்ளது. A/C உள்ளது. நம்பர் எடுக்காதது. 1982ம் ஆண்டு மொடல். பதிவு இல: CC374 /1,

R நடராசா
109/6, 6-வது லேன்,
பலாலி ரோட்,
கந்தர்மடம், ஆலடிச்சந்தி.

(சி- 0825)



## விற்பனைக்கு

NEW STTANDARD ENCYCLOPEAIDA 14 VOLS Rs: 7, 080/-
SESAME STREET, CHILDRENS PROGRAMME 25 VOLS- Rs: 5,400/-
YOUNG STUDENTS ENCYCLOPEADIA- 24 VOLS Rs 4,680/-
SCIENCE LIBRARY 6 VOLS Rs: 1,295/-

விபரங்களுக்கு தொடர்பு கொள்க.
வியாபாரிகளுக்கு விசேட கழிவு.

Business Systems & Publications,
C/o B. J. வசந்தபாலன்,
இராஜ வீதி, அச்சுவேலி.

(சி- 0892)

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY

வியாழக்கிழமை 3-9-87

## பருத்தித்துறை பஸ்சேவை

(யாழ்ப்பாணம்)

வ பி போ. சபையின் பருத்தித்துறை டிப்போ தனது பஸ் சேவையை நேற்றிலிருந்து இரவு எட்டுமணிவரை நீடித்துள்ளது. [வா]

★

[மன்னார்]

மன்னாரிலிருந்து, யாழ்ப்பாணம், கொழும்பு நீண்ட தூர பஸ் சேவைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

அதே நேரத்தில் மன்னார் சங்குப்பிட்டி பஸ் சேவையும் அதிகரிக்கப்பட்டுள்ளது. மன்னாரில் இரவு 8 00 மணிவரை பஸ் சேவை நீடித்துள்ளது

# களுத்துறைகலவரம்: 50 குடும்பங்கள் கிளிநொச்சிவந்தன

(கிளிநொச்சி)

களுத்துறையிலுள்ள எல்லைக் கந்தை என்னுமிடத்தில் ஏற்பட்ட கலவரத்தைத் தொடர்ந்து மிகவும் பாதிப்படைந்த நிலையில் சுமார் 50 மலையகக் குடும்பங்கள் நிர்க்கதியான நிலையில் கிளிநொச்சியை வந்தடைந்துள்ளனர்.

பிரஸ்தாப தோட்டத்தில் இரு இனங்களுக்கிடையே ஏற்பட்ட கலவரத்தைத் தொடர்ந்து அங்குவாழமுடியாத நிலையில் புகைவண்டி மூலம் இவர்கள் கிளிநொச்சியை வந்தடைந்துள்ளனர்.

இவர்களை கிளிநொச்சிப் பகுதி தமிழ் சங்கம் செல்வா நகர் என்னும் கிராமத்திற்கு அழைத்துச்சென்றுள்ளது.

சம்பவத்தின்போது ஒரு பெண் உட்பட நான்குதமிழர் வெட்டிக்கொலை செய்யப்பட்டதாகவும் பலர் காயமடைந்துள்ளதாகவும் மேலும் பலர் காணமல் போய்விட்டதாகவும் வந்தவர்கள் தெரிவித்தனர்.

அகதிகளைப் பார்வையிட்ட பிரஜைகள் குழுவினர் உடனடி நிவாரணமாக நாலாயிரம் ரூபா பணத்தை வழங்கினர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் கிளிநொச்சி பிராந்தியஅமைப்பாளர் திரு. மூர்த்தி மேற்படி அகதிகள் தொடர்பாக இந்திய இராணுவத்திற்கும் கிளிநொச்சி அரச அதிபருக்கும் மகஜர் ஒன்றைக் கையளித்துள்ளார்.

## கொள்ளையோ கொள்ளை!

(ஊர்காவற்றுறை)

நாராந்தனைக் கிராமப் பகுதியில் மூன்றுவீடுகளில் கொள்ளையும், கொள்ளை முயற்சிகளும் இடம்பெற்றுள்ளன

இரண்டு வீடுகளில் யன்னல் கம்பிகளைப் பிடுங்கி உள்நுழைந்த கொள்ளையர் பல பெறுமதி வாய்ந்த பொருள்களை கொள்ளையிட்டுள்ளனர். இன்னொரு வீட்டில் கொள்ளையிட முயற்சித்தபோது வீட்டுக்காரர் சத்தமிட ஆகாயத்தை நோக்கி துப்பாக்கியால் சுட்டவாறு கொள்ளையர் தப்பிச் சென்றுள்ளனர்.

### மன்னாரில்..

(மன்னார்)

மன்னார் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள பிரபல வர்த்தகர் வீட்டில் முகமூடிக் கொள்ளையர்களால் 25,000ரூபா அபகரித்துச் செல்லப்பட்டுளளது.

### தென்மராட்சியில்..

(மட்டுவில்)

தென்மராட்சியில் திருடர் தொல்லை அதிகரித்துள்ளது

கல்வயல் கூட்டுறவு சங்கக் கடை முகாமையாளர் வீட்டில் விலை உயர்ந்த உடுப்புக்களை திருடியதோடு அதே இரவுஒரு பத்திரிகை நிருபர் வீட்டில் புகுந்து 1500 ரூபா பெறுமதியான சைக்கிளையும் திருடிச் சென்றுள்ளனர்.

### பஸ்ஸில்..

யாழ்ப்பாணத்திலிருந்து சாவகச்சேரிக்கு பபணம்செய்த பெண் பயணி ஒருவரிடமிருந்து சுமார் 3000 ரூபா பெறுமதியான தங்கப் பதக்கம் ஒன்று திருடப்பட்டுளது பதக்கத்தை பறிகொடுத்த பெண் சாவகச்சேரி பஸ்நிலையத்தில் வைத்து கூக்குரல் எழுப்பியதைத் தொடர்ந்து பஸ் புறப்பட விடாமல் தடுக்கப்பட்டது.

பஸ்ஸில் இருந்தவர்களைக் கீழே இறக்கிய பொழுது (கூடை பின்னும் சாத்திரம் சொல்லும்) நாடோடிக் கூட்டமொன்றும் இருந்தது அக்கூட்டத்தைச் சூழ்ந்து கொண்ட சந்தை வியாபாரி வாலிபர்கள் அக்கூட்டத்தில் ஒருவரைப் பணயமாகப் பிடித்து வைத்திருக்கப் போவதாக மிரட்டியதும் தங்கப் பதக்கம் உரியவரிடமிருந்து திருப்பிக் கொடுக்கப் பட்டது.

### ரயில் கட்டணம்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

சதம்.

இதேவேளை யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு செல்லும் பிரயாணிகள் தங்களுக்குரிய ஆசனங்களை முன்கூட்டியே யாழ்ப்பாணத்தில் பதிவுசெய்ய முடியாதென்றும் கொழும்பில்தான் பதிவுசெய்யப்பட வேண்டுமென்றும் தெரிவிக்கப்பட்டது

இதேநேரத்தில் யாழ்ப்பாணத்திலிருந்து தென்னிலங்கைக்கு அனுப்பப்பட வேண்டிய தபால் பொதிகள் யாழ். ரயில் நிலையத்துக்கு நேற்று அனுப்பப்பட்ட போதிலும் அப்பொதிகளைக் கையேற்பதற்கு கொழும்பிலிருந்து ரயில் வண்டியில் பணிபுரியும் தபால்ஊழியர்கள்வராதமையினால் நேற்று ரயில் மூலம் தபால் பொதிகள் அனுப்பப்படவில்லை. (வா)

## மரண அறிவித்தல்

### செல்லத்துரை சேனாதிராசா

[உப முகாமையாளர்-இலங்கைவங்கி யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கலட்டி வீதியில் வசிப்பவரும், மாத்தளையைப் பிறப்பிடமாகக் கொண்டவருமான செல்லத்துரை சேனாதிராசா 31-08-87 அன்று காலமானார். அன்னார் தவமணியின் அன்புக் கணவரும்,சுதர்சன்[பரியோவான் கல்லூரி], சுகன்யா ஆரம்பப் பாடசாலை யாழ் மகளிர் கல்லூரி)ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற சிதம்பரம் செல்லத்துரை, பத்மாவதி (மாத்தளை) ஆகியோரின் அன்பு மகனும், அமரர்கள் கந்தர் சிதம்பரப்பிள்ளை, செல்லம் (சுணடிக்குளி) ஆகியோரின் மருமகனுமாவார். அன்னாரது ஈமைக் கிரியைகள் இன்று(3-9-87)வியாழக்கிழமை இல74 கலட்டி வீதி யாழ்ப்பாணத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக பி ப 3 30 மணிக்கு கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(சி 0827) தகவல்: மனைவி.

### திருமதி நடராசா இராசம்மா

கொட்டடி நடராசா இராசம்மா 30-08-87 அன்று காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்ற நடராசாவின் அன்பு மனைவியும், சத்தியமூர்த்தி (முன்னாள் எம்பிலிப்பிட்டியா கடதாசி ஆலை) அன்புத் தாயாரும், உமாதேவியின் அன்பு மாமியாரும், கோபிநாத் சீதாலட்சுமியின் அன்புப் பாட்டியும் கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த கந்தையா, கொட்டடி காலஞ்சென்ற திருமதி இரத்தினம் பொன்னுத்துரை, திருமதி செல்வரத்தினம் பொன்னுத்துரை, காலஞ்சென்ற நவரட்ணம், பூமணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், சுண்டுக்குளி டாக்டர் துரைராசாவின் சம்பந்தியும் ஆவார். அன்னாரின் பூதவுடல் (இன்று) 03-09-87 வியாழக் கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு கொக்குவில் கிழக்கு பொற்பதி ரோட் இல்லத்திலிருந்து கொக்குவில் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:- பொ. சிறீபத்மநாதன்

74/1, பொற்பதி ரோட்,
கொக்குவில் கிழக்கு. [சி-0838]

### திருமதி அபிராமிப்பிள்ளை கனகரத்தினம்

திருமதி அபிராமிப்பிள்ளை கனகரத்தினம் 02-09-87 காலை இறைபடி சேர்ந்தார். இவர் காலஞ்சென்ற கனகரத்தினம் அவர்களின் அன்புமனைவியும். சிங்காரவேலு [உதவி பொலிஸ் இன்ஸ்பெக்டர், கொழும்பு], ஈஸ்வரியம்மா, இலட்சுமிப்பிள்ளை, செல்வநாயகி, அன்னபாக்கியம் [ஆசிரியை வேலாயுதம் மகாவித்தியாலயம், பருத்தித்துறை) ஆகியோரின் அன்புத் தாயாரும், சேனாதிராசா, யோகாம்பிகை [வர்த்தக கப்பல் துறை அமைச்சு) ஆகியோரின் அன்புமாமியும், செல்வமலர் [கிண்ணியா மூஸ்லிம் மகளிர் வித்தியாலயம்], செல்வகௌரி, செல்வ சுகுணா,விஜித்தா,சியாமளா ஆகியோரின் அன்புப்பேத்தியுமாவர் அன்னாரின்இறுதிக்கிரியைகள் பருத்தித்துறை இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியை ளுக்காக இன்று காலை 9மணிககு குடும்பமயாணத்துக்கு எடுத்துச் செல்லப்படும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: க. சிங்காரவேல்,

வேதவனம் ஒழுங்கை,
தும்பளை ரோட்,
பருத்தித்துறை. [சி-0837]

### பாரிஸில்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

யாழ் தட்டாதெருவைச் சேர்ந்த பி செல்வராசா, கள்ளியங்காட்டைச்சேர்ந்த வான் சாரதி ஆனந்தன் ஆகியோரே பலியானவர்களாகும்.

யாழ்பாணத்தைச் சேர்ந்த பத்துப்பேருடன் சென்ற இந்த வான், மின் கம்பம் ஒன்றுடன் மோதியதால் இந்த விபத்து ஏற்பட்டது எண்மர் படுகாயமடைந்தனர்.

யாழ் நகரைச் சேர்ந்த பி செல்வராசாவின் சடலம் நேற்றிரவு யாழ்ப்பாணம் கொண்டு வரப்பட்டது.

### புதுடில்லி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் திரு. அமிர்தலிங்கமும் மேலும் 3கூட்டணி முக்கியஸ்தர்களும் இப்பேச்சுக்கள் தொடர்பாக கலந்தாலோசனை செய்யுமுகமாக புதுடில்லியிலுள்ளனர். (எ)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1987-ம் ஆண்டு செப்டம்பர்மாதம் 3-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/10036/81 Eelanadu. P. O. Box 49 Telegram, Eelanadu. Telephone; — 22389, 24126.

## மரண அறிவித்தல்

### திருமதி ச. நாராயணசாமிக் குருக்கள்

ஆவரங்கால் ஸ்ரீமதி சரஸ்வதி நாராயணசாமிக் குருக்கள் 02-09-87 புதன்கிழமை காலமானார். அன்னார் கோணேசர் கோவிலின் முன்னைநாள் பிரதமகுரு காலஞ்சென்ற நாராயணசாமிக் குருக்களின் அன்பு மனைவியும், சுப்பிரமணியக் குருக்கள் (மலேசியா), நாகபூஷணி, சோமஸ்கந்த சர்மா (இராமநாதன் நுண்கலைக் கழகம்), புவனேஸ்வரி, தாட்சாயணி (ஆசிரியை கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயம், பாலச்சந்திர சர்மா (கொழும்பு) ஆகியோரின் அருமைத் தாயாரும், கௌரிசங்கர சர்மா, சாரதாதேவி, குகனேஸ்வரி, வரதராஜ சர்மா (ஓய்வுபெற்ற தபாலதிபர்), சிவானந்த சர்மா (கோப்பாய் சிவம், நீர்ப்பாசன இலாகா, பளை) ஆகியோரின் மாமியாரும், ஷண்பகவல்லி, உபேந்திர சர்மா, நவரஞ்சனி, அகிலாண்டேஸ்வரி, உமா மகேஸ்வரன், முரளீதரன், பிரவீணா, பிரணவன் ஆகியோரின் பாட்டியுமாவார். அன்னாரது இறுதிக் கிரியைகள் (இன்று) 03-09-87 வியாழக்கிழமை பிற்பகல் 2-00 மணிக்கு அன்னாரது ஆவரங்கால் வாசஸ்தலத்தில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகிறோம்.

தகவல்:- அ. நா. சோமஸ்கந்த சர்மா

[சி-840]

### S. P. செல்வராஜா



அமரர் பேருவளை பொன்னுத்துரை - சிவபாக்கியத்தின் சிரேஷ்ட புதல்வன் செல்வராஜா பிரான்சில் அகால மரணமானார். அன்னார் கமலாவதியின் அன்புக் கணவரும், செல்வேந்திரா (யாழ். பரியோவான் கல்லூரி), நளாயினி (யாழ். இந்து மகளிர் கல்லூரி), சுயாந்தினி (யாழ்.இந்து மகளிர் கல்லூரி), தர்மேந்திரா ஆகியோரின் அன்புத் தந்தையும் யோகேந்திரா, (உரிமையாளர், பேருவளை பார்மசி, யாழ்ப்பாணம்), மகேந்திரா (கணக்காளர், கொழும்பு), விமலாதேவி (சம்பியா), கமலாதேவி, சரோஜினிதேவி, விஜயேந்திரா (உரிமையாளர், S. P. L. S & Co, மட்டக்களப்பு) ஆகியோரின் அன்புச் சகோதரரும், திரு. திருமதி பொன்னுத்துரை (லேகியம் கடை, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மருமகனும், வரதராஜன் (பொருளியலாளர், சம்பியா), இராஜசூரியர் (உரிமையாளர் I. M. P. ரவல்ஸ், வெள்ளவத்தை), திருநாவுக்கரசு (அவுஸ்திரேலியா), சீதாலட்சுமி, சரோஜினி, நித்தியலட்சுமி, பாலசுப்பிரமணியம் (கனடா), சோதி (ராஜன் கூல்பார்), கனகசபாபதி, பாலசரஸ்வதி, பாக்கியராசா, விமலாவதி, புஸ்பவதி (லண்டன்), பத்மாவதி ஆகியோரின் அன்பு மைத்துனரும், துரைராஜா (பொறியியலாளர்), விஜயரட்ணம் (சுபமாலா மோட்டோஸ்), சிவநாதன் (லண்டன்), கிருபானந்தா (ஆனந்தா காட்வெயார்ஸ்) ஆகியோரின் அன்புச் சகலனும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (03-09-87) வியாழக்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:- S. P. யோகேந்திரா
(பேருவளை பார்மசி, யாழ்ப்பாணம்.)

826/17, K. K. S. வீதி,
யாழ்ப்பாணம் [சி-0842]